19.11.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## சோலார் மின்சாரம்: தமிழகம் முன்னிலை



புதுடில்லி : நாட்டில், கட்டடங்களின் கூரை மேல் நிறுவப்பட்ட, சூரிய ஒளி பேனல் கட்டமைப்பு மூலம் பெறப்படும் மின்சாரம், 525 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது; இதில், தமிழகம் முன்னணி யில் திகழ்கிறது.

கட்டடங்களின் கூரைகளில் நிறுவப்பட்ட, சூரிய ஒளி மின் கட்டமைப்பு மூலம் பெறப்படும் மின்சாரம் குறித்த அறிக்கை, நேற்று வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டு உள்ளதாவது:கடந்த, 12 மாதங்களில், நாடு முழுவதும், கட்டடங்களில் நிறுவப்பட்ட சூரிய ஒளி மின் கட்டமைப்பு மூலம், 525 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இது, முந்தைய ஆண்டை விட, 66 சதவீதம் அதிகம்; முந்தைய மூன்று மாதங்களில் நிறுவப்பட்ட, சூரிய ஒளி மின் கட்டமைப்பு திறன் அளவு, கடந்த ஒரே ஆண்டில் நிறுவப்பட்டு உள்ளது. கட்டடங்களின் கூரை மீதான, சூரிய ஒளி மின் கட்டமைப்பு மூலம், 2020ல், 6.5 கிகா வாட் மின் உற்பத்தி செய்யப்படும் என, மதிப்பிடப்பட்டு

உள்ளது. இத்துறையில், தமிழகம் முன்னணியில் உள்ளது. அதைத் தொடர்ந்து, மஹாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்கள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. அடுத்த சில ஆண்டுகளில், கட்டடங்கள் மீதான சூரிய ஒளி மின் கட்டமைப்பு நிறுவும் துறை, கணிசமான வளர்ச்சி பெறும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**விளைச்சல் பாழ்: உயர்ந்தது காய்கறி விலை**

பெங்களூரு:தென் மாநிலங்களில் பெய்து வரும் கனமழையால், விளைச்சல் பாதித்து, பெங்களூரில் காய்கறிகளின் விலை, 'கிடுகிடு'வென உயர்ந்துள்ளது. கோலார், சிக்கபல்லாபூர், தொட்டபல்லாபூர், ஹொஸ்கோட், மண்டியா, ஆனேக்கல் உட்பட பல்வேறு பகுதிகளிலிருந்து, பெங்களூருக்கு காய்கறிகள் வருகின்றன. ஆனால், கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால், காய்கறி விளைச்சல் சேதமடைந்துள்ளது. இதனால், பெங்களூருக்கு வரும் காய்கறிகளில், 30 - -40 சதவீதம் குறைந்துள்ளது. காய்கறிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள தால், இதன் விலை உயர்ந்துள்ளது. 'புதிய விளைச்சல் மார்க்கெட்டுக்கு வரும் வரை, காய்கறிகளின் விலை குறைய வாய்ப்பில்லை' என, வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

| காய்கறி | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| | ரூபாயில் | |
| தக்காளி | 40 | 70 |
| பீன்ஸ் | 30 | 60 |
| உருளைக்கிழங்கு | 16 | 20 |
| பச்சை மிளகாய் | 25 | 30 |
| கேரட் | 30 | 40 |
| பஜ்ஜி மிளகாய் | 30 | 40 |
| முள்ளங்கி | 30 | 30 |
| பீட்ரூட் | 30 | 40 |
| பச்சைப்பட்டாணி | 100 | 200 |
| வெண்டைக்காய் | 30 | 50 |
| வெங்காயம் | 30 | 60 |

வரத்து குறைவுகோலார் மாவட்டத்தின் சுற்றுப்பகுதிகளில் பெய்த மழையால், அதிக அளவிலான தக்காளி பாழாகியுள்ளது. எனவே, தக்காளியின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கே.ஆர்.மார்க்கெட்டில், 1 கிலோ,

30 ரூபாய் வீதம் விற்கப்பட்ட தக்காளி, இப்போது, 70 ரூபாயாக உயர்ந்துள்ளது. மழையால் பீன்ஸ், வெண்டைக்காய் விலையும் அதிகரித்துள்ளது.

சித்ரதுர்காவில் மழையால், வெங்காய விளைச்சல் பாழானதால், வெங்காய வரத்து குறைந்துள்ளது. கடந்த வாரம் யஷ்வந்த்பூர் ஏ.பி.எம்.சி., மார்க்கெட்டுக்கு, தினமும், ஒரு லட்சத்துக்கும் அதிகமான மூட்டைகள் வந்தன. மழை துவங்கிய பின், இந்த அளவு, 74 ஆயிரம் மூட்டையாக குறைந்துள்ளது. கடந்த வாரம், 50 கிலோ கொண்ட வெங்காய மூட்டை, 1,200 - 1,500 ரூபாய் வரை இருந்தது. இப்போது, 1,300 - 2,000 ரூபாயாக உயர்ந்துள்ளது. சில்லரை மார்க்கெட்டில், 1 கிலோ வெங்காயம், 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அவரை உற்பத்திஆண்டுதோறும் நவம்பர் முதல், அவரைக்காய் அதிகளவில் மார்க்கெட்டில் விற்பனைக்கு வருவது வழக்கம். தமிழில் இதை 'மொச்சக்காய்' என்றும், கன்னடத்தில், 'அவரைக்காளு' என்றும் குறிப்பிடுவர். கடந்த ஆண்டே பருவம் தவறி பெய்த மழையால், விளைச்சல் குறைந்து, 10 சதவீத உற்பத்தி பாதிக்கப்பட்டது. இந்தாண்டும் நவம்பரில் அதிகளவில் மார்க்கெட்டுக்கு வர வேண்டிய அவரைக்காய் வரத்து குறைந்துள்ளது. இதனால், அறுவடை முடிந்து மார்க்கெட்டுக்கு குறைந்தளவில் வரும்போது, விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'ஹாப்காம்ஸ்' மூத்த அதிகாரிகள் கூறுகை யில், 'வழக்கமாக அக்டோபரில் பூக்க துவங்கி, நவம்பரில் அறுவடைக்கு தயாராகும் அவரைக்காய் விளைச்சல், மழையால் பாதிக்கப்பட்டதால், மாகடி, தேவனஹள்ளி, கோலார், சென்னபட்டணா மற்றும் பல பகுதிகளில் இதை முக்கிய விவசாயமாக கருதும் விவசாயிகள் கவலையில் உள்ளனர். இதனால் இந்தாண்டும் அவரைக்காய் பற்றாக்குறை அதிகரிக்க கூடும்' என்றனர்.

**மீண்டும் மழை எச்சரிக்கை**



சென்னை: தமிழகத்தில் கனமழை குறைந்து மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. இந்த சூழ்நிலையில் மீண்டும் மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 'மேலடுக்கு சுழற்சியால் கடலோரம் அல்லாத மாவட்டங்களில் கனமழை பெய்யும்' என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் ஒரு வாரத்திற்கு மேலாக கனமழை கொட்டித் தீர்த்தது. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உட்பட பல மாவட்டங்களில் பல பகுதிகள் வெள்ளக் காடாயின; மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. இந்த மாவட்டங்களில் மழை விட்டுள்ள நிலையில், மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் நேற்று கூறியதாவது:தென் மேற்கு வங்கக்கடலில் ஆந்திரா அருகே நிலை கொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி வலு குறைந்து அதே இடத்தில் நீடிக்கிறது. தமிழகத்தின் கடலோரமல்லாத மாவட்டங்களை ஒட்டி மேலடுக்கு சுழற்சி, நிலை கொண்டுள்ளது. இதனால் தமிழகம், புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. கோவை, நீலகிரி, விருதுநகர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் கனமழை பெய்யக் கூடும். இவ்வாறு அவர் கூறினார்.நேற்று காலை 8:30 மணி நிலவரப்படி அதிகபட்சமாக சிவகாசி - 10; விருதுநகர் - 9; ராஜபாளையம் - 8; திருமயம், இலுப்பூர், தொண்டி, இளையான்குடி - 6; அருப்புக்கோட்டை, மருங்காபுரி, கழுகுமலை மற்றும்

சாத்துாரில் 5 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. தமிழகம் முழுவதும் நேற்று வரை சராசரியாக 39 செ.மீ., மழை பெய்துள்ளது. வட கிழக்கு பருவ மழையின் வழக்கமான அளவை எட்ட இன்னும் 5 செ.மீ., மழை தேவை.

## மழையால் பாதிப்பா? இரவிலும் '104'ஐ அழைக்கலாம்

சென்னை:'மழை பாதிப்புகளுக்கு, 24 மணி நேரமும், '104' சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம்' என, அறிவிக்கப்பட்டு உள்ளது.தமிழகத்தில், தொலைபேசி வழியே மருத்துவ ஆலோசனை தரும் வகையில், '104' சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு, மனநல ஆலோசனை, மருத்துவ ஆலோசனைகள், மருத்துவமனைகள், ரத்த வங்கிகள், கண் தானம் குறித்த தகவல்கள் தரப்படுகின்றன.இதுதவிர, மழையால் ஏற்படும் பாதிப்பு, வெள்ள பாதிப்புகளுக்கும் உதவி கோரியும், சுகாதாரத் துறை சார்ந்த புகார்கள் குறித்தும், 24 மணி நேரமும் மக்கள் தொடர்பு கொள்ளலாம்; தீர்வு காண வழிவகுக்கப்படும் என, சேவை மையம் அறிவித்து உள்ளது.

## சென்னையை சுற்றி தொடர் மழைஇவை தான் முக்கிய காரணங்கள்

சென்னையை சுற்றி அதிகளவில் கான்கிரீட் சாலைகள் அமைப்பு, மரங்கள் அழிப்பு போன்ற இயற்கைக்கு எதிரான செயல்கள் நடந்ததால், தொடர்ந்து ஒரே பகுதியில், அதிகளவில் மழை கொட்டியதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். வடகிழக்கு பருவமழை அக்., 28ம் தேதி துவங்கியது. 15 நாட்களாக, இடை விடாமல் மழை பெய்ததால், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. 'இதற்கு நீர் கட்டமைப்பை சரி செய்யாததும், மனிதர்களின் இயற்கைக்கு எதிரான நடவடிக்கையுமே காரணம்' என, புவியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். சென்னை பல்கலை புவியியல் பேராசிரியர் பாஸ்கரன் கூறியதாவது:கடல் காற்றுக்கும், தரைக்காற்றுக்கும் இடையிலான வெப்பம் மற்றும் குளிர் வித்தியாசமே மழை பொழிவுக்கு காரணி. தற்போது வடகிழக்கு பருவமழைக் காலமாக இருந்தாலும், இடைவிடாமல் மழை பெய்வதற்கு புவி வெப்பமயமாதல் முக்கிய காரணம்.சூரியனில் இருந்து வரும் வெப்பம் பூமியில்

பட்டு, அதில் பெரும் பகுதி சாதாரண தரையாலும், கடலாலும் ஈர்க்கப்பட்டு சிறிதளவே மேலே எழும்பும். ஆனால், தற்போது பூமிக்கு வரும் சூரிய வெப்பத்தின் பெரும் பகுதியை கடல் இழுத்து கொள்கிறது. ஆனால், தரைக்கு வரும் வெப்பத்தில், 70 சதவீதம் மீண்டும் மேலே திருப்பி விடப்படுகிறது.இதற்கு கட்டடங்களில் பூசப்பட்டுள்ள ரசாயன பெயின்டிங்; காடுகள் மற்றும் மரங்கள் அழிப்பு; தொழிற்சாலைகளில் இருந்து சுத்திகரிக்காமல் வெளியேற்றப்படும் கார்பன் புகை; ரசாயன கழிவுகளால் வெளியேறும் சுழற்சியுறாத துாசி; நீரை உறிஞ்சாத வகையில், அதிக அளவில், கான்கிரீட் சாலைகள் அமைத்தல் போன்றவையே காரணம். இயற்கைக்கு எதிரான இந்த நடவடிக்கைகளால், சூரிய வெப்பம் பூமிக்குள் வராமல் வெளியேற்றப்படுகிறது. அதனால், வளி மண்டலத்தில் மாற்றம் ஏற்பட்டு, மழையின் தன்மை மாறி, ஒரே இடத்தில் தொடர்ந்து பெய்யும் நிலை உருவாகிறது.மேலும், காற்றின் ஈரப்பதம் கடலிலும், தரையிலும், 15 நாட்களாக சமமாக இருந்ததால், காற்றழுத்த தாழ்வு நிலை நகர காலதாமதம் ஏற்பட்டு மழை கொட்டியது. இந்த நிகழ்வு, புவியியல் அமைப்பு படி, எப்போதாவது நடக்கக் கூடியது தான். ஆனால், அதை சமாளிக்கும் கட்டமைப்பை ஏற்படுத்தி, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில், வெப்பத்தை பூமி உறிஞ்சும் வகையில், நம் செயல்பாடுகள் அமைய வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**தமிழகத்தில் மீண்டும் மழை எச்சரிக்கைபல மாவட்டங்களில் விடாது கொட்டும்**

சென்னை:தமிழகத்தில் கனமழை குறைந்து மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. இந்த சூழ்நிலையில், மீண்டும் மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 'மேலடுக்கு சுழற்சியால், கடலோரம் அல்லாத மாவட்டங்களில் கனமழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.தமிழகத்தில், ஒரு வாரத்திற்கு மேலாக, கனமழை கொட்டித் தீர்த்தது. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உட்பட பல மாவட்டங்களில், பல பகுதிகள் வெள்ளக்காடாயின; மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. இந்த மாவட்டங்களில், மழை விட்டுள்ள நிலையில், மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்நிலையில், சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் நேற்று கூறியதாவது:தென் மேற்கு வங்கக்கடலில், ஆந்திரா அருகே நிலை கொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, வலு குறைந்து அதே இடத்தில் நீடிக்கிறது. தமிழகத்தின் கடலோரமல்லாத மாவட்டங்களை ஒட்டி, மேலடுக்கு சுழற்சி நிலை கொண்டுள்ளது. இதனால், தமிழகம், புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. கோவை, நீலகிரி, விருதுநகர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் கனமழை பெய்யக் கூடும். சென்னையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.நேற்று காலை, 8:30 மணி நிலவரப்படி, அதிகபட்சமாக, சிவகாசி - 10; விருதுநகர் - 9; ராஜபாளையம் - 8; திருமயம், இலுப்பூர், தொண்டி, இளையான்குடி - 6; அருப்புக்கோட்டை, மருங்காபுரி, கழுகுமலை மற்றும் சாத்துாரில், 5 செ.மீ., மழை பதிவாகிஉள்ளது. தமிழகம் முழுவதும், நேற்று வரை சராசரியாக, 39 செ.மீ., மழை பெய்துள்ளது. வட கிழக்கு பருவ மழையின் வழக்கமான அளவை எட்ட, இன்னும், 5 செ.மீ., மழை தேவை.

## ராஜபாளையத்தில் விடிய விடிய கனமழை

ராஜபாளையம் : விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் விடிய விடிய கனமழை பெய்து வருகிறது. கனமழையின் காரணமாக விஏஓ அலுவலகம், ரேஷன் கடை, குடியிருப்புப் பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

## மரவள்ளி விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிப்பு! மணிலா உள்ளிட்ட மாற்றுப் பயிருக்கு முயற்சி

விழுப்புரம்: மரவள்ளி கிழங்கு டன் ஒன்று ஆயிரம் முதல் 1,500 ரூபாய்க்குள் விலை போவதால், அறுவடைக் கூலி கூட கிடைக்காமல்,விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மணிலா, சவுக்கு உள்ளிட்ட மாற்றுப் பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகள் முயற்சி மேற்கொண்டுள்ளனர். விழுப்புரம்மாவட்டத்தில் நெல், மணிலா, கரும்பு, மரவள்ளி, உளுந்து, மஞ்சள் மற்றும் மக்காச்சோளம் ஆகியன சாகுபடி செய்யப்படுகின்றன.நெல் சாகுபடியில் போதிய லாபம் கிடைக்காதது, வேலை

ஆட்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களால் கரும்பு சாகுபடிக்குவிவசாயிகள் மாறினர்.அதனை தொடர்ந்து கரும்புக்கு எதிர்பார்த்த விலை கிடைக்காதது, மேலும் அரசு நிர்ணயம் செய்யும்விலையை உரிய காலத்தில் ஆலை நிர்வாகம் வழங்காதது போன்ற காரணங்களால் மரவள்ளி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்செலுத்தத் துவங்கினர்.

மரவள்ளி நடவு செய்த முதல் ஆறு மாதத்தில் ஊடு பயிராக உளுந்து, மணிலா மற்றும் எள் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்து, அதன் மூலம் மரவள்ளிநடவு செய்த தொகை மற்றும் உரச் செலவுகளை ஈடு செய்ய முடிந்தது.

அதனை தொடர்ந்து மரவள்ளி அறுவடை செய்யும் போது, சேலம் மாவட்டத்திலுள்ள ஆலை நிர்வாகம், நேரடியாக வயலுக்கே வந்து, அறுவடைசெய்யப்படும் கிழங்குகளை வாங்கி, லாரிகள் மூலம் கொண்டு சென்றனர். இதனால் விவசாயிகளுக்கு அறுவடை மற்றும் விற்பனை செய்வது மிகவும்எளிதாக இருந்தது. மேலும் அறுவடை செய்யப்படும் மரவள்ளி கிழங்கு, டன் ஒன்றுக்கு கடந்தாண்டு குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாய் முதல் 11 ஆயிரம்ரூபாய் வரை விலை கிடைத்தது.மேலும் ஏக்கருக்கு 12 முதல் 15 டன் வரை கிழங்கு அறுவடை செய்யப்பட்டது. கிழங்குகளை ஆலை நிர்வாகம் வாங்கும் போதே, பணம் பட்டுவாடாசெய்யப்பட்டது.இதனால் ஏக்கர் ஒன்றுக்கு, ஒரு லட்சம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு லாபம் கிடைத்தது. இதனால் இந்தாண்டு விழுப்புரம்மாவட்டத்தில் பரவலாக, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில், மரவள்ளி சாகுபடி செய்தனர். தற்போது அனைத்து இடங்களிலும் மரவள்ளி கிழங்குகள்அறுவடை செய்யப்படுகின்றன. ஆனால், இந்த ஆண்டும் கூடுதல் விலை கிடைக்கும் என்று எதிர்பார்த்த விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்தது. கடந்தாண்டு டன் ஒன்றுக்கு 11ஆயிரம் ரூபாய் விலை கிடைத்த நிலையில், தற்போது டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் முதல் ஆயிரத்து 500 ரூபாய் வரை மட்டுமே விலை கிடைக்கிறது.மேலும் கடந்தாண்டு போதிய அளவு மழை இல்லாததால், சரியான முறையில் ஊடு பயிர்கள் செய்ய முடியாமல் போனது. அதேபோல் இந்தாண்டுஅறுவடையின் போது ஏக்கருக்கு 7 முதல் 9 டன் வரை மட்டுமே கிழங்கு கிடைக்கிறது.

விலையும் கடுமையாக வீழ்ச்சியடைந்து, மகசூலும் குறைந்து போனதால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது அறுவடை செய்யும்கூலிக்கு

கூட மரவள்ளி விளைச்சல் மற்றும் விலை கிடைக்கவில்லை. இதனால் நிலத்தி லிருக்கும் மரவள்ளி செடிகளை அப்புறப்படுத்திவிட்டு, மாற்றுப்பயிராக மணிலா மற்றும் சவுக்கு பயிர் செய்ய விவசாயிகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

**பாம்பன் மீனவர் வலையில் சிக்கிய ராட்சத சுறா மீன்கள்**



ராமேஸ்வரம்,:ராமேஸ்வரம் அருகே பாம்பன் மீனவர் வலையில் ராட்சத சுறா மீன்கள் சிக்கியது. பாம்பனில் இருந்து நவ., 17ல் 80 விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குள் சென்று, நேற்று கரை திரும்பினர். ஒருவரின் படகில் 30 கிலோ எடையில் இரு ராட்சத பால் சுறா மீன்கள் இருந்தது. இதனை வியாபாரிகள் கிலோ ரூ. 80 க்கு வாங்கினார். ஆனால் சுறா மேல்புறம், பக்கவாட்டு, வால் பகுதியில் உள்ள 12 பீலியை(துடுப்பு) மீன் வியாபாரி ஒருவர் தனியாக அறுத்து எடுத்தார். இந்த பீலி ஒரு கிலோ ரூ. 400 க்கு விற்கப்பட்டது.சீலா மீன் சீசன்: நேற்று கரை திரும்பிய பாம்பன் படகுகளில் 50 முதல் 100 கிலோ வரை சீலா மீன்கள் சிக்கியது. மீனவர் யோவான் படகில் மட்டும் 500 கிலோ சீலா மீன்கள் சிக்கியது. 8 முதல் 15 கிலோ எடை சீலா மீன்களை கிலோ ரூ. 450க்கு வியாபாரிகள் வாங்கினர். இவை கோவை, பொள்ளாச்சி, பாலக்காடு மீன் மார்க்கெட்டுக்கு அனுப்பினர்.

**பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு திட்டம் துவக்கம்..! விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம் வருவாய் வாய்ப்பு**



மதுரை: மதுரை மாவட்டம் சேடப்பட்டி யூனியன் வண்டப்புலி ஊராட்சியில், ஊரக வளர்ச்சி முகமை மூலம், மூன்று பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு திட்டம் துவக்கப்பட்டது. விவசாயத்திற்கு தண்ணீர் பெறுவதுடன், விவசாயிகள் ஆண்டுக்கு ரூ.2 லட்சம் கூடுதல் வருவாய் ஈட்ட வாய்ப்புள்ளது.மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் மூலம் மாவட்டத்தில் 1200 பண்ணை குட்டைகள் அமைக்கப்படுகின்றன. மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் அதிகம் அமைக்கப்படுகின்றன. இதில் 600 குட்டைகள் அமைக்கும் பணி நடக்கின்றன. 200 குட்டைகளின் பணி முடிந்து விட்டது.சேடப்பட்டி யூனியனில் தாதம்பட்டியில் அதிகபட்சமாக 58 குட்டைகள் வரை அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதன் மூலம், விவசாயத்திற்கும் தண்ணீர் பெற முடியும். தற்போது இந்த குட்டைகளில் விருப்பத்துடன் முன்வரும் விவசாயிகளுக்கு மீன் பண்ணையும் அமைத்து கொடுக்க கலெக்டர் சுப்பிரமணியன், கூடுதல் கலெக்டர் ரோகிணி உத்தரவிட்டனர்.

மீன் வளர்ப்பு துவக்கம்வண்டப்புலி ஊராட்சியில் மூன்று பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு திட்டம் நேற்று துவங்கப்பட்டது. கூடுதல் கலெக்டர் ஒவ்வொரு குட்டையிலும் தலா ஆயிரம் மீன்குஞ்சுகளை குட்டைகளில் விட்டு துவக்கி வைத்தார்.அவர் கூறியதாவது: பண்ணை குட்டைகள் மீன் வளர்ப்புக்கு ஏற்ற வகையில் 1500 மீட்டர் ஆழம் கொண்டதாக

அமைக்கப்படுகின்றன. வண்டப்புலியில் மூன்று குட்டைகளில் விடப்பட்ட குஞ்சுகள், 7 மாதங்கள் வளர்ந்து விடும். விவசாயிகளுக்கு பாசனத்திற்கு தண்ணீர் கிடைப்பதுடன், ஆண்டுக்கு ரூ.2 லட்சம் வரை வருவாய் ஈட்டவும் வாய்ப்புள்ளது, என்றார்.

### மீனவர்களுக்கு அரிசி வழங்கல்

புதுச்சேரி: காலாப்பட்டு தொகுதியில் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட மீனவர் பகுதி மக்களுக்கு காலாப்பட்டு என்.ஆர். காங்., வழக்கறிஞர் விஸ்வநாதன் அரிசி வழங்கினார்.

கனகசெட்டிக்குளம், சின்ன காலாப்பட்டு, பிள்ளைச்சாவடியில் உள்ள 4 ஆயிரம் மீனவ குடும்பங்களுக்கு தலா 3 கிலோ அரிசியை தனது சொந்த செலவில் விஸ்வநாதன் வழங்கினார். கனகசெட்டிக்குளம், பெரியகாலாப்பட்டு மீனவர் பகுதியில் அனைத்து குடும்பங்களுக்கும் நேற்று அரிசி வழங்கப்பட்டது.

காலாப்பட்டு பஞ்சாயத்து தலைவர் மணிபாலன், மூர்த்தி, ராஜேந்திரன், சுதாகர், பாலமுருகன், தம்பிராஜ், தினகரன், கனகசெட்டிக்குளம் பஞ்சாயத்து தலைவர் சுப்ரமணி, வடமலை, வல்லத்தான், பிள்ளைச்சாவடி ரகுபதி, சின்ன காலப்பட்டு கந்தன் உட்பட ஊர் பிரமுகர்கள் இருந்தனர்.

### மரக்கன்றுகள் நடும் விழா

திருபுவனை: திருபுவனையில் நம் மக்கள் மன்றத்தின் மூன்றாம் ஆண்டு துவக்க விழாவையொட்டி, மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது.

தொகுதி செயலாளர் சாரதி தலைமை தாங்கினார். தொகுதி தலைவர் வெங்கடேசன் வரவேற்றார். மன்றத்தின் நிறுவனர் வேலு மரக்கன்றுகளை நட்டார். மன்ற நிர்வாகிகள் சரவணன், செந்தில், வினோத் உள்ளிட்ட கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

### பூண்டியில் இருந்து புழலுக்கு வினாடிக்கு 500 கனஅடி திறப்பு

திருவள்ளூர் : பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து திறந்து விடப்பட்ட உபரிநீர் நிறுத்தப்பட்டு, புழல் ஏரிக்கு, வினாடிக்கு, 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து

விடப்பட்டுள்ளது.பூண்டி நீர்த்தேக்கத்தின் மொத்த கொள்ளளவான, 3,231 மி.கனஅடி யில், 2,478 மி.கனஅடி தண்ணீர் உள்ளது. நீர்த்தேக்கத்திற்கு நீர்வரத்து, 759 கனஅடியாக உள்ளது. இதையடுத்து, பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து, உபரிநீர் வெளியேற்றப்பட்டு வந்தது. நேற்று உபரிநீர் வெளியேற்றம் நிறுத்தப்பட்டு, சென்னை புழல் ஏரிக்கு, 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

### '29,640 ஏக்கர் விளைநிலங்கள் சேதம்'

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு குறித்து ஆட்சியர் வீரராகவ ராவ் நேற்று கூறியதாவது:கொற்றலை ஆற்றில் இருந்து உபரிநீர் திறக்கப்பட்டதால், மணலிபுது நகர், ஆண்டார்குப்பம் உள்ளிட்ட பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. தற்போது, உபரிநீர் முற்றிலும் நிறுத்தப்பட்டதால் வெள்ளம் வடிந்து வருகிறது.

= மாவட்டத்தில், 83 முகாம்களில், 58,728 பேருக்கு உணவு வழங்கப்படுகிறது

= இதுவரை, 6,869 வீடுகள் சேதமடைந்து உள்ளன

= ஐந்து பேர் இறந்துள்ளனர்; 71 கால்நடைகள் இறந்துள்ளன

= முதற்கட்ட ஆய்வில், 29,640 விளை நிலங்கள் சேதமடைந்துள்ளது தெரிய வந்துள்ளது

= வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து, 820 பேர் மீட்கப்பட்டு உள்ளனர்

= 86 ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகள்சீரமைக்கப்பட்டு உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

### திருவள்ளூரில் 995 ஏரிகள் 100 சதவீதம் நிரம்பின

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள, 1,236 ஏரிகளில், 995 ஏரிகள் முழுமையாக நிரம்பி உள்ளன. திருவள்ளூர் மாவட்டத்தில், ஒன்றிய கட்டுப்பாட்டில், 649; பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில், 587 என, மொத்தம், 1,236 ஏரிகள் உள்ளன. சில நாட்களாக

பெய்துவரும் கனமழையால், ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. மாவட்டத்தில் உள்ள, 1,236 ஏரிகளில், 995 ஏரிகள் முழு அளவிலும், 236 ஏரிகள், 50 சதவீதமும், 5 ஏரிகள், 50 சதவீதத்திற்கு குறைவாகவும் நிரம்பியுள்ளதாக, மாவட்ட நிர்வாகம் தெரிவித்து உள்ளது.

திருவள்ளூர் ஒன்றியத்தில் உள்ள, 43 ஏரிகளில், காக்களூர் உட்பட, 10 ஏரிகள் மட்டுமே முழுவதும் நிரம்பி உள்ளன.கடம்பத்துார் ஒன்றியத்தில் உள்ள, 95 ஏரிகளில், எறையாமங்கலம், இலுப்பூர், கல்லம்பேடு, கண்ணுார், கொட்டையூர், முதுகூர், புதுமாவிலங்கை, புதுவள்ளூர், புதுப்பட்டு உள்ளிட்ட ஏரிகளின் கரைகளில் ஏற்பட்ட உடைப்பை, ஒன்றிய நிர்வாகம் சீரமைத்தது.

வெங்கத்துார் ஏரியில் நீர் கசிவு ஏற்பட்டு, தண்ணீர் நிரம்பாமல் வெளியேறி வருகிறது. கடம்பத்துார், வெண்மனம்புதுார், கசவநல்லாத்துார் ஏரிகளில் குறைந்தளவு தண்ணீரே உள்ளது.

திருத்தணி, திருவாலங்காடு ஒன்றியத்தில், பொதுப்பணி துறையின் 20 ஏரிகளும் நிரம்பி வழிகின்றன. 77 ஒன்றிய ஏரிகளில், 25 ஏரிகள் நிரம்பி உள்ளன.

கொத்துார், ஒரத்துார், பழையனுார் ஏரிகள் உடைப்பு ஏற்பட்டு, சீரமைக்கப்பட்டது.

பள்ளிப்பட்டு வட்டத்தில் உள்ள, 61 ஏரிகளில், வீரமங்கலம், பாண்டரவேடு, பொதட்டூர்பேட்டை, வீரமங்கலம் உள்ளிட்ட, 38 ஏரிகள் நிரம்பியுள்ளன; 10 ஏரிகள், 90 சதவீதத்தை எட்டியுள்ளன

கும்மிடிப்பூண்டி பொதுப்பணித் துறையின், 68 ஏரிகளில், 45 ஏரிகள் முழுமையாகவும், மற்றவை, 75 சதவீதமும் நிரம்பியுள்ளன . ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ள காரம்பேடு, எருக்குவாய், ஆராமணி, அல்லிப்பூதாங்கல், கீமளூர் உள்ளிட்ட ஏரிகளின் கரைகள் மற்றும் கலங்கல்களில் உடைப்பு ஏற்பட்டு, தண்ணீர் விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளை சூழ்ந்துள்ளது.

ஏரி பெயர் கொள்ளளவு

(மில்லியன் கன அடியில்) நிரம்பிய அளவு

(சதவீதம்)

| | | |
|---|---|---|
| மாதவரம் | 32 | 100 |
| அம்பத்துார் | 218 | 100 |
| கொரட்டூர் | 235 | 100 |
| போரூர் | 46 | 75 |

### காவேரிப்பாக்கம் ஏரிக்கு பாலாற்று நீர் திருப்பம்

வேலுார்: பாலாற்றில் வரும் தண்ணீர், காவேரிப்பாக்கம் ஏரிக்கு திருப்பி விடப்பட்டதால், ஏரி வேகமாக நிரம்பி வருகிறது. வேலுார் மாவட்டத்தில் பெய்த கன மழையால், பாலாறு, பொன்னையாறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த ஆறுகளை பார்வையிட்ட கலெக்டர் நந்தகோபால், கரையோரம் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும்படி எச்சரிக்கை விடுத்தார். பாலாற்றில் வரும் தண்ணீர், மாவட்டத்தில் பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரிக்கு திருப்பி விடப்பட்டுள்ளது. இதனால் காவேரிப்பாக்கம் ஏரி வேகமாக நிரம்பி வருகிறது. இந்த ஏரியை பார்வையிட்ட கலெக்டர், ஏரி பகுதிகளில் ஆக்கிரமிப்புக்கள் செய்பவர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, எச்சரிக்கை விடுத்தார்.

### வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு

விழுப்புரம்: கோலியனுார் ஒன்றியப் பகுதிகளில் சேதமடைந்த நெல் வயல்களை, வேளாண்மை இணை இயக்குனர் ரத்தினசபாபதி ஆய்வு செய்தார்.

கோலியனுார் ஒன்றியத்திலுள்ள பிடாகம், அத்தியூர் திருவாதி, வேலியம்பாக்கம், சித்தாத்துார் திருக்கை ஆகிய பகுதிகளில் பயிர்கள் சேதமடைந்தன. இப்பகுதியை, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ரத்தின சபாபதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது விவசாயிகள் கணேசன், ராமு, ராஜபதி, சின்னதம்பி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட விவசாயிகளின், அறுவடைக்கு தயாராக இருந்த 50 ஏக்கர் பரப்பளவிலான நெல் வயல்கள் சேதமடைந்திருப்பதை பார்வையிட்டார். பின் அதிகளவு தேங்கி நிற்கும் மழைநீரை அப்புறப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுரைகள் வழங்கினார்.

ஆய்வின் போது, வேளாண்மை உதவி இயக்குனர் செல்வசேகர், உதவி வேளாண்மை அலுவலர் ஏழுமலை ஆகியோர் உடனிருந்தனர்.

## மரவள்ளி கிழங்கு விற்பனை

சின்னசேலம்: சின்னசேலத்தில் மரவள்ளி கிழங்குகளை கார்களில் வைத்து விற்பனை செய்யதனர்.

சின்னசேலம் தாலுகாவில், நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில், மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளதால், விலை மிகவும் வீழ்ச்சிஅடைந்துள்ளது. தற்போது 70 கிலோ எடையுள்ள ஒரு முட்டை கிழங்கு 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், தங்கள் நிலத்திலிருந்து அறுவடை செய்யப்படும் கிழங்கை, கார்களில் ஏற்றிச் சென்று, கிலோ 10 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். இவற்றை பொது மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர்.

## சாகுபடி பணியில் விவசாயிகள் தீவிரம்

தர்மபுரி: தொடர் மழையால், தர்மபுரி மாவட்டத்தில் பெரும்பாலான அணை, ஏரி, குளங்கள் நிரம்பியுள்ளன. தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நிலத்தடி நீர் மட்டமும் உயர்ந்துள்ளது. இதையடுத்து விவசாயிகள், சாகுபடி பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தர்மபுரி மாவட்டம், விவசாய தொழிலை பிரதானமாக கொண்டது. மாவட்டத்தில், 70 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் மழையை நம்பி, ராகி, சாமை,

சோளம், கம்பு, உள்ளிட்ட சிறு தானிய பயிர்கள் மற்றும் பருத்தி, துவரை, மொச்சை, கொண்ட கடலை உள்ளிட்ட மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. அணை, ஏரி, குளங்கள் மற்றும் கிணறு ஆகியவை மூலம், 50 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல், இறவை பாசனம் மூலம், நெல், கரும்பு, மஞ்சள், தக்காளி, மக்காச்சோளம், மரவள்ளி கிழங்கு மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர்களான, காய்கறி, மலர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக போதிய மழையில்லாததால், மானாவாரி பயிர்களும், இறவை பாசன பயிர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டது. குறிப்பாக, கடந்த தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால், சோளம், கம்பு, கரும்பு, நிலக்கடலை, பருத்தி, மரவள்ளி கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், வடகிழக்கு பருவமழை தொடங்கியதால், கரும்பு, மரவள்ளி கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். குறிப்பாக, கடந்த, 9ம் தேதி முதல் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால், மாவட்டத்தில் தும்பலஹள்ளி அணை தவிர மற்ற, ஏழு அணைகளுக்கும் தண்ணீர் வரத்து தொடர்கிறது. இதில், மூன்று அணைகள் நிரம்பியுள்ளன. மேலும், மாவட்டத்தில் பெரும்பாலான ஏரி, குளங்களில் தண்ணீர் குறிப்பிடத் தக்க வகையில் நிரம்பியுள்ளன. கனமழையால், விவசாய கிணறுகளில் நீர் மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்நிலையில், நெல், கரும்பு உள்ளிட்ட இறவை பாசன பயிர்கள் நடவு செய்ய, விவசாயிகள் ஆரம்ப கட்ட பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். இதேபோல், மானாவாரி பயிர்கள் சாகுபடிக்கு விவசாயிகள் தங்களது நிலங்களில் உழவு பணி மற்றும் விதைகள் நடவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில் உள்ள அணைகள், ஏரி, குளங்களில் இருந்து விரைவில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வாய்ப்புள்ளதால், இப்பகுதி பாசன விவசாயிகள் சாகுபடிக்கு தேவையான முன்னேற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## இயற்கை உரங்களில் தரக்கட்டுப்பாடு: மத்திய அரசுக்கு தொடர் பரிந்துரை

ஈரோடு: 'ரசாயனம் கலந்த உரங்களுக்கு தரக்கட்டுப்பாடு உள்ளதுபோல, இயற்கை உரங்கள் என்ற பெயரில் வரும் உரங்களுக்கும் தரக்கட்டுப்பாடு

தேவை' என, மாநில வேளாண் துறை, மத்திய அரசிடம் பரிந்துரை செய்து வருகிறது.

யூரியா, பொட்டாசியம், காம்ப்ளக்ஸ் உரங்கள் என வேதிப்பொருட்கள் கலந்த உரங்களை தயாரிக்கும் நிறுவனங்கள், மத்திய, மாநில அரசு அனுமதியுடன், தரக்கட்டுப்பாட்டு விதிகளை பின்பற்றுகின்றன. ஆனால், 'பயோ பெர்டிலைசர்', 'பயோ நியூட்ரியன்ட்ஸ்', அசோஸ்பைரில்லம், பாக்டீரியா பேக் என்ற பெயரில் இயற்கை உரம், உயிர் உரம் என, பலரும் விற்பனை செய்கின்றனர். இவற்றை தயாரிக்கவும், விற்பனை செய்யவும் உரிமம் பெறுவதில்லை. கடந்த, மூன்றாண்டுக்கு முன், ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியில் மஞ்சளுக்கு இதுபோன்ற இயற்கை உரம் பயன்படுத்திய நிலையில், மஞ்சள் கருகி வீணானது. அப்போது, வேளாண் துறையினர், குறிப்பிட்ட கடையில் இருந்து உரங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. மஞ்சள் கருகிப்போனதற்கு, உரங்கள்தான் காரணம் என, தெளிவுபடுத்தவும், தரக்கட்டுப்பாடு குறித்து தெரிவிக்கவும் இயலாமல், வழக்கு நீர்த்தது. மேலும், வேம்பு, இலுப்பை, பஞ்சகாவ்யம், சுண்ணாம்பு கரைசல் என்ற நேரடி பெயரில், மருந்து விற்கப்படுகிறது. இவற்றையும் கட்டுப்படுத்த முடிவதில்லை.

இதுபற்றி, வேளாண் அதிகாரி கூறியதாவது: உரிமம் பெற்ற உரக்கடையில், அரசால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள், உரங்களை மட்டுமே விற்க வேண்டும். இதுபோன்ற உரங்களை வைத்திருந்தால், உரிமத்தில் குறிப்பிட்ட படி, இவற்றை விற்கக்கூடாது என்று மட்டுமே எங்களால் கூற முடியும். அதிகப்படியாக, அவற்றை பறிமுதல் செய்யலாம். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. இருப்பினும், இயற்கை மற்றும் உயிர் உரங்களை முறையாக தயாரித்து விற்பனை செய்ய வழிகள் உள்ளன. இதுபற்றிய வழிகள், தரக்கட்டுப்பாடுகளை உருவாக்க, மாநில வேளாண் ஆணையர் மூலம், மத்திய அரசுக்கு பரிந்துரை அனுப்பி உள்ளோம். இதுபோல, பல மாநிலங்களில் இருந்தும், மத்திய அரசுக்கு சென்றுள்ளன. தற்போது, உரங்களை குறைக்க வேண்டுமென பரிந்துரை செய்யும் அதே நேரம், முறையாக உயிர் மற்றும் இயற்கை உரங்களை தயாரித்து விற்பனை செய்ய, மத்திய அரசு விரைவில் வழி செய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

## மஞ்சள் விலை ரூ.10,110 ஐ எட்டியது

ஈரோடு: வரத்து குறைவால், மஞ்சள் விலை நேற்று குவிண்டால், 10 ஆயிரத்து,110 ரூபாயை எட்டியது.

மஞ்சள் நகரமான ஈரோட்டில், ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளி மார்க்கெட், ஈரோடு சொசைட்டி, கோபி சொசைட்டி மற்றும் செம்மாம்பாளையம் மஞ்சள் வணிக வளாகம் என ஐந்து இடங்களில் மஞ்சள் விற்பனை நடக்கிறது. கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக மஞ்சள் விலை தொடர்ந்து ஏறுமுகமாக உள்ளது. கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் உற்பத்தி குறைவு, வறட்சியால் சாகுபடி பரப்பு குறைவு, இருப்பு குறைவால், விற்பனையும் குறைந்துள்ளது. இதனால், தேசிய அளவிலான மஞ்சள் தேவையை, ஈரோடு மார்க்கெட் பூர்த்தி செய்கிறது. இதனால், கடந்த அக்., 1ம் தேதி மஞ்சள் குவிண்டால், 6,600 முதல், 7,900 ரூபாய் வரை விற்பனையானது. கடந்த, 1ம் தேதி, 7,400 முதல், 9,089 ரூபாய் வரை விற்றபனையானது. தீபாவளியை முன்னிட்டு, வரத்து அதிகரித்து விற்பனையும், விலையும் படிப்படியாக உயர்ந்தது. நேற்று, கோபி சொசைட்டியில், விரலி ஒரு குவிண்டால், 10 ஆயிரத்து,110 ரூபாய்க்கு விற்பனையானது.

இதுபற்றி, வியாபாரிகள் கூறியதாவது: தேசிய அளவில் தேவை உயர்ந்தாலும், வரத்து குறைவாக உள்ளது. இதனால், கடந்த இரண்டு நாட்களாக, சேலம் ஹைபிரைடு ரகங்கள், 10 ஆயிரத்து,100 முதல், 10 ஆயிரத்து, 200 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று, ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில், விரலி மஞ்சள், 8,785 முதல், 9,997 ரூபாய்க்கும், கிழங்கு 8,525 முதல், 9,285 ரூபாய் வரையிலும், வெளி மார்க்கெட்டில், விரலி, 6,609 முதல், 9,988 ரூபாய் வரையிலும், கிழங்கு, 6,099 முதல், 9,289 வரையிலும், ஈரோடு சொசைட்டியில், விரலி, 9,999 முதல், 8,785 ரூபாய் வரையிலும், கிழங்கு, 8,370 முதல், 9,400 ரூபாய் வரையிலும், கோபி சொசைட்டியில் விரலியில், 7,385 முதல், 10 ஆயிரத்து,110 ரூபாய், கிழங்கு, 7,258 முதல், 9,510 ரூபாய் வரை,

விற்பனையானது. பல மாதங்களுக்குப்பின், விரலி மஞ்சள், 10 ஆயிரத்து,110 ரூபாய்க்கு விற்பனையானதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நெற்பயிரில் இலை சுருட்டல் நோய்: வேளாண் அதிகாரிகள் அறிவுரை

மொடக்குறிச்சி: மொடக்குறிச்சி வட்டாரத்தில் நெற் பயிர்களில் இலைசுருட்டல் நோய் தாக்கியுள்ளதால், அவற்றை கட்டுப்படுத்த வேளாண்துறை அதிகாரிகள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து மொடக்குறிச்சி வேளாண் உதவி இயக்குனர் குழந்தைவேலு கூறியதாவது: மொடக்குறிச்சி வட்டாரத்தில், 100 ஹெக்டேருக்கும் மேல் இலை சுருட்டல் நோய் நெற்பயிர்களை தாக்கியுள்ளது. பருவ நிலை மாற்றங்களே இதற்கு காரணம். இதன் அறிகுறி இலைகள் நீளவாக்கில் சுருண்டு ஒட்டியிருக்கும். புழுக்கள் இலையை சுருண்டு உண்பதால், வெள்ளையாக இருக்கும். தீவிர தாக்குதல் ஏற்பட்டால் பயிர்கள் அனைத்தும் வெள்ளை நிறத்தில் காய்ந்து இருக்கும். இதை கட்டுப்படுத்த ஆங்காங்கே முகாம்கள் அமைக்கப்பட்டு மருந்து தெளிப்பது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் நெற்பயிர்கள் தாக்குதல் இடம் குறித்து ஆய்வு செய்து வரப்படுகிறது. இதை எளிதில் கட்டுப்படுத்தலாம்.

விளக்குப்பொறி வைத்து தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். வேளாண் அதிகாரிகளின் சிபாரிசுக்கு அதிகமாக தழைச்சத்து இடாமல் இருக்கவேண்டும். டிரைக்கோ கிராமா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணியை பயிர் நடவு செய்த 37, 44, 51வது நாட்களில் ஒரு ஏக்கருக்கு, 4,000 ஒட்டுண்ணிகள் விடவேண்டும். வளர்ச்சி பருவத்தில், 10 சதவீதம் தாக்குதல் காணப்பட்டாலும், பூக்கும் பருவத்தில், 5 சதவீதம் தாக்குதல் காணப்பட்டாலும், குளோரிபைரிபாஸ் மருந்தை ஏக்கருக்கு, 500 மி.லி, கார்போ ஹைட்ரோ குளோரைடு, 400 கிராம் ஏக்கருக்கு, அல்லது புளுபெண்டிமைடு, 70 மி.லி. ஏக்கருக்கு என பூச்சி மருந்துகளை காலை மற்றும் மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளித்தால் பயிர்களை காப்பாற்ற முடியும். இவ்வாறு வேளாண் அதிகாரி கூறினார்.

## விலங்குகள் வருகை குறைந்தது: விவசாயிகள் மனம் நிறைந்தது

பவானிசாகர்: பவானிசாகர் வனப்பகுதி விளாமுண்டி வனத்தில் இருந்து, யானைகள் அடிக்கடி ஊருக்குள் புகும். விவசாய பயிர்களை நாசப்படுத்தி, மனிதர்களையும் தாக்கியது. யானைக் கூட்டத்தால், பவானிசாகர், புங்கம்பள்ளி, பனையம்பள்ளி, மல்லியம்பட்டி, பெரியகள்ளிப்பட்டி வட்டார மக்கள், விவசாயிகள், அச்சத்துடன் வாழ்ந்து வந்தனர். இப்போது வனத்தில் மழை பெய்திருப்பதால், யானைகள் கூட்டம் ஊருக்குள் புகுவது முற்றிலும் நின்று விட்டது. கடந்த ஒரு மாதமாக யானைகள் வரவில்லை. இதனால் விவசாயிகள் நிம்மதியாக உள்ளனர்.

## உரங்களை அதிக விலைக்கு விற்றால் உரிமம் வேளாண்துறை அதிகாரி எச்சரிக்கை

பழநி,:அரசு கூட்டுறவு உரக்கடைகள், தனியார் உரக்கடைகளில் அரசு நிர்ணயத்துள்ள விலையை விட கூடுதலாக விற்றால் உரிமம் ரத்துசெய்யப்படும் என வேளாண்துறை எச்சரித்துள்ளது.

பழநி பகுதியில் தொடர் மழை காரணமாக நீர்நிலைகள் நிரம்பியுள்ளன. இதனால் விவசாயிகள் ஆயக்கட்டுபகுதிகளில் நெல் சம்பா நடவு பணியை துவக்கியுள்ளனர். மானாவாரி சாகுபடி பகுதிகளில் மக்காசோளம், பருத்தி, பயறு வகைகள் பயிரிடப்பட்டு வருகிறது. இதற்கான உரங்களை தனியார், கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வினியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகளிடம் தற்போது உரத்தேவை அதிகரித்துள்ளது. ஒட்டன்சத்திரம் பகுதியில் ஏராளமான விவசாயிகள் உரங்களை வாங்கி செல்கின்றனர். ஒருசில உரக்கடைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையை விட கூடுதலாக விற்பனை செய்யப்படுகிறது. வேறு வழியில்லாமல் அப்பாவி விவசாயிகள் கூடுதல் விலைக்கு வாங்கி செல்வதாக புகார்கள் விவசாய அதிகாரிகளுக்கு வந்துள்ளன.

இது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் சுருளிப்பன் கூறியதாவது: உரக்கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்படும். அதில் உரிய உரிமம், ஒப்புதல் படிவம் இல்லாமல் விற்பனை செய்தல், நிர்ணய விலைக்கு கூடுதலாக

உரங்களை விற்பது போன்ற தவறுகள் கண்டறியப் பட்டால் உரக்கட்டுபாட்டு சட்டப்படி கடையின் உரிமம் ரத்து செய்யப்படும். சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் உரங்களை வாங்கும் போது பில்லை கட்டாயம் வாங்க வேண்டும். இந்த பில்லை பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டும், என்றார்.

## சூறைக்காற்றுடன் சாரல் மழை

தாண்டிக்குடி: தாண்டிக்குடி அதனைச்சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் கடந்த சில தினங்களாக சூறைக்காற்றுடன் சாரல் மழை பெய்து வருகிறது.வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ள நிலையில் மலைப்பகுதியில் வெயில் முகம் காணாது வானம் மேகமூட்டத்துடன் சூறைக்காற்றுடன் அவ்வப்போது சாரல் மழை, குளிர் நிலவுகிறது. பனிமூட்டம், குளிர் காற்றால் மலைப்பகுதியினர் காய்ச்சல், சளி தொந்தரவுகளால் அவதியுறுகின்றனர்.

## காளான் உற்பத்தி அதிகரிப்பு

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து பெய்த சாரல் மழையால் காளான்கள் அதிகமாக முளைத்துவருகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட காளான் வகைகள் உள்ளன. இவற்றில் பால் காளான், சிப்பி காளான், பட்டன் காளான் ஆகியவை சைவ உணவாக பயன்படுத்தப்படுகிறது. ஆர்.எஸ்.மங்கலம் பகுதிகளில் இவை மரபொந்துகள், வைக்கோல் படப்புகளில் அதிகமாக உற்பத்தி யாகிறது. நோய் எதிர்ப்பு சக்திக்கான ஆற்றல் படைத்தது என்பதால் இவற்றை சேகரித்து ஊறுகாய், கூட்டு, ஜாம் ஆகிய பதார்த்தங்கள் செய்து உணவுடன் சேர்த்து சாப்பிடுகின்றனர். சர்க்கரை நோய், இதய நோய், ரத்த அழுத்தம், புற்றுநோய் <உள்ளிட்ட நோய் களை குணப்படுத்தும் அருமருந்தாகவும் காளான் உள்ளது. வயல் பகுதிகள், வைக்கோல் படப்புகளில் முளைத்துள்ள வெண்மையான காளான்களை உணவுக்காக அப்பகுதி மக்கள் சேகரித்து செல்கின்றனர்.

## 116 ஏக்கரில் தட்டைப்பயறு

காரைக்குடி,: செட்டிநாடு கால்நடை பண்ணையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக கால்நடை தீவனம், கிரிராஜா கோழி குஞ்சுகள், தலச்சேரி

ஆடுகள், ராஜஸ்தான் ஜமுனா பாரி ஆடுகள், வெள்ளை பன்றி வளர்க்கப்படுகின்றன. மே<லும் வரும் காலங்களில் பசுந்தீவனங்களை விவசாயிகளே தங்கள் நிலங்களில் சாகுபடி செய்வதற்காக, செட்டிநாடு கால்நடை பண்ணையில் 116 ஏக்கரில் தட்டைப்பயறு சாகுபடி செய்யப்பட்டு விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

### நாட்டு கோழி வளர்ப்பு ஆய்வு

காரைக்குடி: சோதனை முறையில் நாட்டு கோழி வளர்ப்பில் செட்டிநாடு கால்நடை பண்ணை ஈடுபட்டுள்ளது. இந்தியாவில் குருவுக்கோழி, பெருவிடைக்கோழி, கொண்டைகோழி, குட்டைகால் கோழி உட்பட 8-க்கும் மேற்பட்ட ரகங்கள் வளர்க்கப்பட்டு வந்தன. இடைப்பட்ட காலங்களில் கோழி வளர்ப்பு குறைந்து போனது. மீண்டும் வீடுகளில் நாட்டுக்கோழி வளர்ப்பதற்கான ஆராய்ச்சியில் கால்நடை துறை ஈடுபட்டு வருகிறது. அதன் ஒரு கட்டமாக தமிழகத்தில் மூன்று பண்ணைகளில், நாட்டுக்கோழியை வீட்டு சூழலுக்கு ஏற்ப வளர்த்து, கோழி வளர்ப்போருக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும், என்பதை ஆய்வு செய்ய உள்ளது.காரைக்குடி செட்டிநாடு கால்நடை பண்ணையில் ஒட்டன்சத்திரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட 100 நாட்டு கோழி குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன. இந்த கோழிகளுக்காக கீரை வகைகள், செடிகள் வளர்க்கப்பட்டு, கரையான் புற்றுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

### சிவகங்கையில் தொடர் மழைவாழை விலை வீழ்ச்சி

சிவகங்கை,:சிவகங்கை வி.மலம்பட்டியில் வாழை கமிஷன் மார்க்கெட் செயல்படுகிறது. செவ்வாய்,வெள்ளி சந்தைகூடும். மலம்பட்டி, கன்னிமார்பட்டி, கண்டாங்கிபட்டி, சாலூர் மற்றும் மதுரை மேலூர், தேனி சின்னமனூரில் விளையும் வாழைதார் விற்பனைக்கு வரும். மார்க்கெட்டை சுற்றியுள்ள கிராமங்களில் 30 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் வாழை நடவு செய்துள்ளனர். தினமும் மார்க்கெட்டிற்கு பச்சை, நாடு, கற்பூரவள்ளி, ரஸ்தாளி, பூவன் வகை என 8 ஆயிரம் வாழை தார்கள் வருகின்றன.வாழைதார் வரத்து அதிகரித்தும் இவற்றை வாங்க வியாபாரிகள் ஆர்வம் காட்டவில்லை..மலம்பட்டி மார்க்கெட்டில் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு வாழை தார் (100 முதல் 150

பழம்) ரூ.500 முதல் 600 வரை விற்றால் மட்டுமே லாபம் விவசாயிகளுக்கு கிடைக்கும். ஆனால், மார்க்கெட்டில் ஒரு வாழை தார் ரூ.250ல் இருந்து அதிகபட்சம் ரூ.350க்கு மட்டுமே விற்றதால், வியாபாரி மற்றும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஒக்குப்பட்டி விவசாயி கண்ணன் கூறுகையில்,""ஒரு ஏக்கரில் வாழை நட ரூ.1 லட்சம் செலவாகிறது. தொடர் மழைக்கு வாழை விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கார்த்திகை முதல் தை வரை முருகன், ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து, விரதம் இருப்பதால் வாழைப்பழம், இலைகளின் தேவை அதிகரிக்கும். தற்போது விலை இல்லாதபோதும், கார்த்திகை பிறந்து 10 நாட்களுக்கு பின் நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்," என்றார். வி.மலம்பட்டி வாழை கமிஷன் கடை உரிமையாளர் பிரபு கூறுகையில்,""தொடர் மழைக்கு சளி பிடிக்கும் என மக்கள், வாழை பழத்தை மக்கள் அதிகம் சாப்பிடுவது இல்லை. நேற்று மார்க்கெட்டிற்கு அதிகளவில் வாழை தார்கள் வந்தபோதும், வியாபாரிகள் அதிகளவில் வாங்க வரவில்லை. குறைந்த விலைக்கு தான் விற்றோம். கார்த்திகை முதல் தை வரை பக்தர்கள் பூஜைக்கு அதிகளவில் பயன்படுத்துவதால், விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம்," என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கூடுதல் மகசூல் பெற நெல் நடவு வயலில் ஊட்டச்சத்து மேலாண்மை...**



கூடுதல் மகசூல் பெற நெல் நடவு வயலில் ஊட்டச்சத்து மேலாண்மை செய்யலாம் என, வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது. சம்பா நெல் நடவு சாகுபடி செய்யும் விவசாயிகள் பின்வரும் வழிமுறைகளில் ஊட்டச்சத்து மேலாண்மையை மேற்கொண்டால் கூடுதல் மகசூல் பெறமுடியும். தற்போது சம்பா நெல் நடவுப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், நடவு வயலுக்குத் தேவையான ஊட்டச்சத்து அளிப்பது இன்றியமையாதது. ஊட்டச்சத்து மேலாண்மையை முறையாக மேற்கொண்டால் நெற்பயிருக்குத் தேவையான சத்துகள் கிடைத்து நெல் பயிர்கள் நன்கு செழித்து வளரும். கரிம (அங்கக) உரங்கள்: 1 ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழுஉரம் அல்லது கம்போஸ்ட் மற்றும் 2.5 டன் பசுந்தாள் உரமிட்டு நன்கு உழவு செய்ய வேண்டும். பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பு, தக்கைப்பூண்டு போன்றவற்றை பூப்பூக்கும் முன்பு மடக்கி உழுதுவிட வேண்டும். இதை மடக்கி உழவு செய்யும்போது ஒரு அங்குலம் உயரத்துக்கு வயலில் நீரைத் தேக்கி வைக்க வேண்டும். பசுந்தாள் மிதிப்பான் (பழ்ஹம்ல்ப்ங்ழ்) பயன்படுத்தி மண்ணுக்குள் மறையுமாறு அமிழ்த்துவிட வேண்டும். பசுந்தாள் தழை உரமெனில் சிறிது சிறிதாக நறுக்கி வயலில் பரப்பி மிதிப்பது நல்லது. நுண்ணுயிர் உரங்கள்: அசோலா- சம்பா பருவத்துக்கு 1 ஏக்கருக்கு 100 கிலோ அசோலாவை நடவு செய்த 3 முதல் 5 நாட்களுக்குள் பரவலாகத் தூவி நெற்பயிருடன் வளரவிட வேண்டும். அசோலா வளர்ச்சியடைந்தபிறகு களையெடுக்கும் போது களையெடுக்கும் கருவி மூலமாகவோ அல்லது காலால் வயலுக்குள் மிதித்துவிட வேண்டும். உயிர் உரங்கள்: ஓர் ஏக்கருக்கு அசோஸ்பைரில்லம் (நெல்) மற்றும்

பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் உரங்கள் ஆகிய ஒவ்வொன்றிலும் 4 பொட்டலங்கள் (800 கிராம்) எடுத்து 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து சீராகத் தூவி விட வேண்டும் அல்லது அசோஸ்பைரில்லம் (நெல்) மற்றும் பாஸ்போபாக்டீரியா திரவ நுண்ணுயிரிகளை ஒவ்வொன்றிலும் 200 மில்லியை 1 லிட்டர் நீரில் கலந்து அதை நன்கு தூளாக்கப்பட்ட 10 கிலோ தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும். சூடோமோனாஸ் புளோரசன்ஸ்: ஓர் ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனாஸ் எதிர் உயிர்ப் பூஞ்சாணத்தை 10 கிலோ தொழு உரத்துடனும் 10 கிலோ மணலுடனும் கலந்து நடவுக்கு முன்பு சீராகத் தூவினால், பயிருக்கு நோய் எதிர்ப்புத்தன்மை அதிகரிக்கும். ரசாயன உரங்கள்: மண் பரிசோதனை முடிவின் அடிப்படையிலேயே உரமிடுதல் வேண்டும். அவ்வாறு உரமிடுவதால் பயிரின் தேவைக்குக் குறைவாகவோ அதிகமாகவோ உரமிடுவதைத் தவிர்க்கலாம். இதனால், உரச் செலவு குறைகிறது. மண் பரிசோதனை செய்ய இயலாத நிலையில் பொதுப் பரிந்துரையாக ஓர் ஏக்கருக்கு 33 கிலோ யூரியா, 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை அடி உரமாகக் கடைசி உழவின்போது இட வேண்டும்.

நுண்ணூட்டக் கலவை: நெல் நுண்ணூட்டக் கலவையை ஓர் ஏக்கருக்கு 5 கிலோ அளவில் 20 கிலோ மணலுடன் கலந்து நடவுக்கு முன்பு சீராகத் தூவ வேண்டும். மாறாக இந்த நுண்ணூட்டக் கலவையை அடி உரமாக இடக்கூடாது. இந்த ஊட்டச்சத்து மேலாண்மையை நெல் நடவு வயலில் விவசாயிகள் மேற்கொண்டால், கூடுதல் மகசூல் கிடைக்குமென புதுகை வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் வ.சாந்தி, வேளாண் அலுவலர் பொ. செல்வி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**பண்ணைக் கழிவுகளில் இருந்து உரம் தயாரிக்கலாம்!**



செயற்கை உரங்களால் மண் தனது வளத்தை இழந்து வரும் நிலையில், விவசாயிகளின் கவனம் இயற்கை உரங்களின் பக்கம் திரும்பியுள்ளது. செயற்கை உரங்களைக் காட்டிலும் இயற்கை உரங்களின் விலை குறைவு என்பதை விட அவற்றை விவசாயிகளே உற்பத்தி செய்ய முடியும் என்பதே இதன் தனிச் சிறப்பு. விவசாயிகள் பண்ணைக் கழிவுகளில் இருந்து அங்கக உரம் தயாரிக்கும் முறை குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சூழல் அறிவியல் துறை, வளங்குன்றா அங்கக வேளாண்மைத் துறைப் பேராசிரியர் அ.பரணி கூறியதாவது:

மண்ணின் வளம் இயல்பாக இருந்தால் மட்டுமே பயிர் உற்பத்திக்கு ஏற்ற நிலை உருவாகும். பயிர்க் கழிவுகள், விலங்கினக் கழிவுகள் காலப்போக்கில் ரசாயன மாற்றம் அடைந்து மண்ணின் அங்ககப் பொருளாக மாற்றம் அடைகின்றன. இந்த ரசாயன மாற்றம் ஏற்படுவதற்கு மண்ணில் இயற்கையாக உள்ள ஏராளமான நுண்ணுயிர்கள் உதவுகின்றன.

இதைத் தவிர மண் புழுக்கள், பல்வேறு பூச்சிகள், நத்தை, கரையான், எறும்பு திண்ணி போன்ற பிராணிகளும் மண்ணின் வளம் சிறக்க வழிவகுக்கின்றன. 10 டன் குப்பை உரம் 50 முதல் 70 கிலோ தழைச் சத்தையும், 15 முதல் 20 கிலோ மணிச் சத்தையும், 50 முதல் 70 கிலோ சாம்பல் சத்தையும் தரவல்லது.

திடக் கழிவுகளில் பயிர்களுக்குத் தேவையான எல்லா சத்துகளும் அடங்கி உள்ளன. இந்த பண்ணைக் கழிவுகளைச் சரியான முறையில் பயன்படுத்தினால் அதில் இருந்து அதிக சத்துகளை பயிர் எடுத்துக் கொள்ளும் நிலைக்கு மாற்றித்

தர முடியும். மக்க வைத்தல்: மக்கும் நிகழ்வின்போது, கழிவுகளின் துகள்களின் அளவு முக்கியப் பங்கு வகிக்கிறது. பண்ணைக் கழிவுகளை மக்கச் செய்வதற்கு முன் அவற்றை 2 முதல் 2.5 செ.மீ. கொண்டதாக நறுக்க வேண்டும். கரிமச் சத்து, தழைச் சத்தின் விகிதம்தான் மக்கும் காலத்தையும், வேகத்தையும் முடிவு செய்கின்றன.

எனவே, கிளைரிசீடியா இலைகள், அகத்தி, தக்கைப் பூண்டு இலைகள் போன்ற பச்சைக் கழிவுகளையும், வைக்கோல், காய்ந்த இலைகள், காய்ந்த புல்கள் போன்ற கரிமச் சத்து அதிகமுள்ள பழுப்பு நிறக் கழிவுகளையும் சேர்த்தால் அது விரைவில் மக்கிவிடும். அதேபோல, கால்நடைகள், பறவைகள், பண்ணையில் வளர்க்கப்படும் விலங்குகளின் கழிவுகளிலும் தழைச் சத்து அதிகம் உள்ளது. கம்போஸ்ட் உரம் தயாரிப்பு: கம்போஸ்ட் உரக் குவியல் அமைக்க குறைந்தது 4 அடி உயரத்துக்கு கழிவுகளை போட்டு அவற்றின் அளவை சமப்படுத்த வேண்டும். மக்க வைக்கும் இடம் சற்று உயர்வாகவும், நிழலாகவும் இருக்க வேண்டும். கழிவுகள் அனைத்தையும் நன்கு கலக்கி விட வேண்டும். கரிமம், தழைச் சத்து நிறைந்த கழிவுகளை மாற்றி, மாற்றி பரப்பி, இடையிடையே கால்நடைக் கழிவுகளையும் கலந்து, போதுமான அளவு நீர் தெளிக்க வேண்டும். கழிவுகளைத் துரிதமாக மக்க வைக்க வேளாண் பல்கலைக்கழகத்தில் தயாரிக்கப்பட்ட நுண்ணுயிரிக் கூட்டுக் கலவையான பயோமினரலைசரை ஒரு டன் கழிவுக்கு 2 கிலோ என்ற அளவில் பயன்படுத்தலாம். திடக்கழிவு குவியலில் தேவையான அளவுக்கு உயிர் வாயு இருக்க வேண்டும். குவியலை 15 நாள்களுக்கு ஒருமுறை கிளறி விடவேண்டும். மக்கும் நிகழ்வு முடிந்த பின் உரத்தின் அளவு குறைந்து, கருப்பு நிறமாகவும், மண்ணின் மணமும், துகளின் அளவு குறைந்தும் இருக்கும். இதனையடுத்து மக்கிய உரக் குவியலை கலைத்து, சலித்து எடுக்க வேண்டும். மக்காதவற்றை மறுபடியும் உரக்குவியலில் போடலாம். மக்கிய உரத்தை செறிவூட்டுவது எப்படி? அறுவடை செய்யப்பட்ட மக்கிய உரத்தை நிழலில், கடினமான தரையில் குவித்து, நன்மை தரக்கூடிய நுண்ணுயிர்களான அசடோபாக்டர், அசோஸ்பைரில்லம், சூடோமோனஸ், பாஸ்போ பாக்டீரியா (0.2 சதம்) ஆகியவற்றை ஒரு டன் மட்கிய உரத்துடன் கலக்கவேண்டும்.

இதை 20 நாள்களுக்கு அப்படியே வைத்திருக்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட. துரிதப்படுத்தப்பட்ட மக்கிய உரத்தில் சாதாரண மக்கிய உரத்தைக் காட்டிலும் ஊட்டச் சத்தின் நிலை அதிகமாவும், நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் அதிகமாகவும் இருக்கும்.

மண்புழு உரம் தயாரித்தல்: அதிக சத்து கொண்ட மண்புழு உரத்துக்கு மண்புழு தேர்வு முக்கியமானது. இதற்கு ஆப்பிரிக்கன் மண்புழு, சிவப்பு மண்புழு, மட்கும் மண்புழு போன்றவை சிறந்தவையாகும். உரம் தயாரிக்க, நிழலுடன் அதிகளவு ஈரப்பதமும், குளிர்ச்சியுமான இடம் இருக்க வேண்டும். மாட்டுத் தொழுவம், கோழிப் பண்ணைக் கட்டடங்களை இதற்குப் பயன்படுத்தலாம்.

நெல் உமி, தென்னை நார்க்கழிவு, கரும்புத் தோகைகளை மண்புழு உர உற்பத்திக்கான கட்டமைப்பின் அடிபாகத்தில் 3 செ.மீ. உயரத்துக்கு பரப்பி, ஆற்று மணலை அந்தப் படுக்கையின் மேல் 3 செ.மீ. உயர்த்துக்கு தூவவேண்டும். பின்னர் 3 செ.மீ. உயரத்துக்கு தோட்டக்கால் மண்ணைப் பரப்பி தண்ணீர் தெளிக்க வேண்டும்.

கால்நடைக் கழிவுகள், பண்ணைக் கழிவுகள், பயிர்க் கழிவுகள், காய்கறிக் கழிவுகள், மலர் அங்காடிக் கழிவுகள், வேளாண் சார்ந்த தொழிற்சாலைக் கழிவுகள் அனைத்தும் மண்புழு உரம் தயாரிக்கச் சிறந்தவை. ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட படுக்கையில் ஒரு சதுர மீட்டருக்கு 2 கிலோ மண்புழுக்களைத் தூவ வேண்டும். இதனையடுத்து, வாரம் ஒரு முறை படுக்கையின் மேல் பகுதியில் உள்ள உரத்தை மட்டுமே அறுவடை செய்ய வேண்டும். மண்புழு வெளியில் தெரியும் நிலை வரை அறுவடை செய்யலாம். சிறிய படுக்கை முறையில் கழிவுகள் முழுவதும் மக்கிய பின் அறுவடை செய்தால் போதுமானதாகும். சேகரிக்கப்பட்ட உரத்தை ஈரப்பதத்துடன் திறந்த வெளியில் சேமித்து வைக்க வேண்டும். தென்னை நார்க் கழிவுகளை கொண்டு மக்கும் உரம் தயாரித்தல்: தென்னங்கயிறு தொழில்சாலைகளில் இருந்து கிடைக்கும் நார்க் கழிவுகள் சாலையோரம் கொட்டப்பட்டு வீணாகின்றன. தமிழகத்தில் மட்டும் ஆண்டுக்கு 5 லட்சம் டன் நார்க் கழிவுகள் இவ்வாறு வீணாகின்றன. இந்த நார்க்கழிவில் விரைவில் மக்காத லிக்னின், செல்லுலோஸ் ஆகியவை 50 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளன.

இதில் கரிமம், தழைச்சத்து 21:1 என்ற விகிதத்தில் இருப்பதால் இதை அப்படியே உபயோகிக்க முடியாது. எனவே, தென்னை நார்க்கழிவை புளுரோட்டஸ் என்ற காளானைக் கொண்டு மக்க வைத்து, சத்துகளின் அளவை அதிகரிக்கச் செய்து சிறந்த இயற்கை உரமாகப் பயன்படுத்தலாம்.

உரக் குவியல் அமைக்கும் முறை: முதலில் நாரற்ற கழிவுகளை 3 அங்குல உயரத்துக்கு பரப்பி நன்கு நீர் தெளித்து ஈரப்படுத்த வேண்டும். பின்னர் தழைச் சத்துள்ள ஏதேனும் ஒரு மூலப் பொருள், உதாரணமாக கோழிப் பண்ணைக் கழிவுகளை சேர்க்க வேண்டும். தழைச் சத்துக்காக ஒரு டன் கழிவுக்கு 200 கிலோ கோழி எரு பரிந்துரைக்கப்படுகிறது.

முதலில் ஒரு டன் கழிவை 10 சம பாகங்களாக பிரித்து, முதல் அடுக்கின் மேல் 20 கிலோ கோழி எருவைப் பரப்ப வேண்டும். பின்னர் நுண்ணுயிர்க் கலவைகளான புளூரூட்டஸ், பல்கலைக்கழக நுண்ணுயிர் கூட்டுக் கலவை (2 சதவீதம்) கழிவின் மேல் இட வேண்டும்.

இதேபோல, நார்க்கழிவு, தழைச் சத்து மூலப் பொருள்களை ஒன்றன் மேல் ஒன்றாகப் பரப்ப வேண்டும். குறைந்தபட்சம் 4 அடி உயரத்துக்கு இது இருக்க வேண்டும். இந்த கழிவுக் குவியலை 15 நாள்களுக்கு ஒரு முறை கிளறிவிட வேண்டும். தரமான உரத்தைப் பெற ஈரப்பதத்தைத் தக்க வைத்தல் அவசியம். கழிவுகள் 60 நாள்களில் மக்கி உரமாகிவிடும். கழிவுகளின் நிறம் கருப்பாக மாறி, துகள்கள் சிறியதாக மாறும், மக்கிய உரத்தில் இருந்து மண்வாசனை வருவதைக் கொண்டு உரம் தயாரானதை அறியலாம்.

அங்கக உரங்களைப் பயன்படுத்துவது எப்படி? மேற்கண்ட அனைத்து வகையான அங்கக உரங்களையும் எல்லா வகையான பயிர்களுக்கும் ஹெக்டேருக்கு 5 டன் என்ற அளவில் இட வேண்டும். இந்த உரங்களை விதைப்பதற்கு முன் அடியுரமாக இட வேண்டும்.

நாற்றாங்கால்களுக்கும், பாலித்தீன் பைகள், மண் தொட்டிகளில் நிரப்ப வேண்டிய மண் கலவைகளுக்கு 20 சதவீதம் மக்கிய நார்க் கழிவை மணலுடன் கலந்து தயாரிக்க வேண்டும். தென்னை, மா, வாழை உள்ளிட்ட நன்கு வளர்ந்த பழ வகை மரங்களுக்கு ஒரு மரத்துக்கு 5 கிலோ வீதம் இட வேண்டும்.

**புயல் அபாயம் இல்லை: மேலடுக்குச் சுழற்சியால் உள் தமிழகத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

புதிய மேலடுக்கு சுழற்சியால், கோவை, நீலகிரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மேலும் தற்போது தமிழகத்துக்கு புயல் அபாயம் ஏதும் இல்லை என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, சென்னையில் செய்தியாளர்களிடம் வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது: வங்கக் கடலில் நிலை கொண்டிருந்தத் தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியானது, வலுவிழந்து காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக உள்ளது. இந்த நிலையில் தமிழகத்தின் உள் மாவட்டங்களில் புதிதாக ஒரு மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இந்த நிகழ்வின் காரணமாக, கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மட்டுமே மழை பதிவாகியுள்ளது.

முன்னறிவிப்பு:

அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் பலத்த மழை இருக்கும். குறிப்பாக, உள் மாவட்டங்களில் பலத்த மழையை எதிர்ப்பார்க்கலாம்.

அதாவது, நீலகிரி, கோவை, விருதுநகர் போன்ற தமிழகத்தின் உள் மாவட்டங்களில் பலத்த மழை பெய்வதற்கான வாய்ப்புண்டு. சென்னை மாநகரைப் பொருத்தவரை, பொதுவாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரில் ஒரு சில நேரங்களில் மழை பெய்யும் என்றார்.

புயல் ஆபத்து இல்லை: வங்கக் கடலில் புதிதாக தீவிர புயல் உருவாகி வருவதாகவும் அது தமிழகத்தை தாக்கும் என்று வெளியாகி உள்ள செய்தி குறித்து இயக்குநர் ரமணனிடம் கேட்டபோது, அவ்வாறு நடப்பதற்கு வாய்ப்பு இல்லை. தற்போது புயல் தாக்குவதற்கு வாய்ப்பே இல்லை என்றார்.

மழை நிலவரம்(மி.மீட்டரில்): கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் அதிகபட்சமாக சிவகாசியில் 100 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

அதற்கு அடுத்தபடியாக, விருதுநகரில் 90 மி.மீ, ராஜபாளையத்தில் 80 மி.மீ,

கோவிலாங்குளம், புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், இலுப்பூர், மதுரை மாவட்டம் திருமங்கலம், ராமநாதபுரம் தொண்டி, சிவகங்கை மாவட்டம் இளையான்குடி, தூத்துக்குடி மாவட்டம் சுரங்குடி ஆகிய இடங்களில் 60 மி.மீட்டர் மழை பதிவானதாக எஸ்.ஆர். ரமணன் தெரிவித்தார்.

**ஓய்ந்தது மழை; வடிகிறது வெள்ளம்**

திருவள்ளூர் மாவட்டத்தில் புதன்கிழமை மழை ஓய்ந்தது. இதனால், குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் வடிந்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில், கடந்த 10-ஆம் தேதி வடகிழக்குப் பருவ மழை தொடங்கியது. தொடர்ந்து 10 நாள்களாக மழை பெய்ததால், மாவட்டத்திலுள்ள 70 சதவீத ஏரிகள் நிரம்பின.

மேலும், மாவட்டத்தில் உள்ள கூவம், குசஸ்தலை, ஆரணி ஆறு ஆகியவற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், பல கிராமங்களில் வெள்ளம் சூழ்ந்தது.

தாழ்வானப் பகுதிகளில் இருந்த மக்களை வருவாய்த் துறையினரும், பேரிடர் மீட்புக் குழுவினரும் மீட்டு அரசுப் பள்ளிகள், சமுதாயக்கூடங்கள் ஆகியவற்றில் தங்க வைத்தனர்.

தொடர் மழை காரணமாக கடந்த 6 தினங்களாக பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டது. புதன்கிழமை பிற்பகலில், அரசுப் பள்ளிகள், சமுதாய கூடங்களில் தங்க வைக்கப்பட்டவர்கள் அவர்களுடைய இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நெடுஞ்சாலைகள் சேதம்: தொடர் மழை காரணமாக, மாவட்டத்தில் உள்ள அம்பத்தூர்-திருநின்றவூர், வேப்பம்பட்டு-திருப்பதி, திருமழிசை-ஊத்துக்கோட்டை, திருவள்ளூர்-செங்குன்றம், திருவள்ளூர்-ஸ்ரீபெரும்புதூர், கடம்பத்தூர்-பேரம்பாக்கம் உள்ளிட்ட நெடுஞ்சாலைகள் கடுமையாக சேதமடைந்தன.

மேலும் கடம்பத்தூர், திருவாலங்காடு, பூண்டி, திருவள்ளூர் ஒன்றியச் சாலைகளும் சேதமடைந்தன. மாவட்டத்தில் உள்ள 484 கிலோ மீட்டர் தூர

ஒன்றியச் சாலைகளில், 200 கிலோ மீட்டர் தூர சாலைகளும், 892 கிலோ மீட்டர் தூர மாநில நெடுஞ்சாலைகளில் 250 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகளும் சேதமடைந்துள்ளதாக நெடுஞ்சாலைத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், மாவட்டத்தில் புதன்கிழமை மழை ஓய்ந்தது. பெரும்பாலான சாலைகளிலும், குடியிருப்புப் பகுதிகளிலும் வெள்ளம் வடிந்து வருகிறது.

**பூண்டி ஏரியின் உபரி நீர் வெளியேற்றம் நிறுத்தம்**

பூண்டி ஏரிக்கு நீர்வரத்து குறைந்ததால் ஆரணி ஆற்றுக்கு திறந்து விடப்பட்ட உபரி நீர் நிறுத்தப்பட்டது.

வடகிழக்குப் பருவமழை காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில், கடந்த இரண்டு வாரங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், பூண்டி ஏரியின் நீர்மட்டம் நாளுக்கு நாள் உயர்ந்தது. செவ்வாய்க்கிழமை காலை முதல் பூண்டி ஏரிக்கு நீர்வரத்து 11 ஆயிரம் கன அடியாக உயர்ந்ததால் மாலையில் 8 மதகுகள் திறக்கப்பட்டு வினாடிக்கு 20 ஆயிரம் கன அடி வீதம் உபரி நீர் ஆரணி ஆற்றுக்கு திறந்து விடப்பட்டது.

அன்று இரவு, பூண்டி ஏரிக்கு நீர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரம் கன அடியாக குறைந்ததால் ஆரணி ஆற்றுக்கு திறந்து விடப்பட்ட நீர் நிறுத்தப்பட்டது.

புதன்கிழமை காலை நிலவரப்படி, பூண்டி ஏரியில் 2,669 மில்லியன் (ஒரு மில்லியன் என்பது பத்து லட்சத்துக்கு சமம்) கன அடி நீர் இருப்பு உள்ளது.

தற்போது, பூண்டி ஏரியில் இருந்து சென்னை குடிநீருக்காக வினாடிக்கு 500 கன அடி வீதம் புழல் ஏரிக்கு நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

**வெள்ள நீர் வடியாததால் விவசாயிகள் கவலை**

பொன்னேரி பகுதியில் மழை நின்று இரண்டு நாள்கள் ஆன நிலையிலும், விவசாய நிலங்களில் தேங்கியுள்ள வெள்ள நீர் வடியாததால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

கடந்த 10 நாள்களாக பெய்த வடகிழக்குப் பருவமழை காரணமாக, பொன்னேரியில் உள்ள ஆரணி, குசஸ்தலை ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

வெள்ள நீர், ஆங்காங்கு விளை நிலங்களில் புகுந்தது. அதேபோல், இப்பகுதியில் உள்ள ஏரிகள் நிரம்பியதால், அவற்றிலிருந்து வெளியேறும் உபரி நீரும் விவசாய நிலங்களில் தேங்கியுள்ளது.

மீஞ்சூர் ஒன்றியத்தில் வஞ்சிவாக்கம், தத்தைமஞ்சி, சோமஞ்சேரி, ஆசானபூதூர், மடிமை உள்ளிட்ட பகுதிகளில் விவசாய நிலங்களில் நெல் பயிர்கள் மூழ்கியுள்ளன.

மழை நின்று இரண்டு நாள்களைக் கடந்த நிலையிலும், நிலங்களில் தேங்கிக் கிடக்கும் வெள்ளம் இன்னும் வடியாததால் பயிர்கள் அழுகி விடுமோ என்று விவசாயிகள் அச்சப்படுகின்றனர்.

குடியிருப்புகளை சூழ்ந்த நீர்: அத்திப்பட்டு ஊராட்சியில் உள்ள சாமுண்டீஸ்வரி ரயில் நகர், மின் நகர், ஸ்ரீதேவி நகர் உள்ளிட்ட குடியிருப்புகளில் மழை நீர் சூழ்ந்தது.

பொன்னேரி, மீஞ்சூர், அத்திப்பட்டு பகுதிகளில் குடியிருப்புகளை சூழ்ந்துள்ள வெள்ள நீரை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் 826 ஏரிகள் நிரம்பின

தொடர் மழை காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 826 ஏரிகள் நிரம்பின.

திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 1,236 ஏரிகளில், 862 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. எஞ்சிய 373 ஏரிகளில், 367 ஏரிகளில் 60 சதவீதமும், 7 ஏரிகளில் 50 சதவீகிதத்திற்கு குறைவாகவும் நீர் நிரம்பியுள்ளன.

பேரம்பாக்கத்தை அடுத்த கூவம், கொண்டஞ்சேரி, சத்தரை போன்ற பகுதிகளில் ஏரிகள் நிரம்பி சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடின.

திருத்தண்டலம் குசஸ்தலையாறு கரையோரப் பகுதிகள் வலுவிழந்ததனால் ஆற்று நீர் வீடுகளில் புகுந்தது. தண்ணீரில் தத்தளித்த 528 நபர்கள் மீட்கப்பட்டு சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். குசஸ்தலையாற்றின் கரையோரப் பகுதிகளில் வலுவிழந்த கரைகளைப் பலப்படுத்த 45 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில், மொத்தம் 111 முகாம்களில் 8,423 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு உணவு, குடிநீர் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன.

## கொடைக்கானலில் தொடர் மழை: அருவிகளில் நீர்வரத்து அதிகரிப்பு

கொடைக்கானலில் தொடர் மழை காரணமாக அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கொடைக்கானலில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் வெள்ளிநீர் வீழ்ச்சி, வட்டக்கானல் அருவி, பாம்பார் அருவி, பியர்சோழா அருவி, செண்பகா அருவி உள்ளிட்ட அருவிகளிலும், நீரோடைகளிலும் நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக குறைந்துள்ளது. கொடைக்கானலில் பல்வேறு இடங்களில் பயிரிடப்பட்டுள்ள உருளை, கேரட், பீன்ஸ் போன்றவற்றில் கருகல், சாம்பல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இவற்றிற்கு மழை நின்ற பின்னர் தான் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க முடியும் என்பதால் அதை பயன்படுத்த முடியாமல் விவசாயிகள் அவதியடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் வழக்கமான குளிரை விட தற்போது அதிக குளிர் நிலவி வருகிறது. இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

## ஒட்டன்சத்திரம் சந்தையில் காய்கறிகள் விலை கிடுகிடு உயர்வு

ஒட்டன்சத்திரம் சந்தையில் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தைக்கு தினசரி சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து பல்வேறு காய்கறிகள் விற்பனைக்கு

வருகின்றன. இந்நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன் பெய்த மழையால் தக்காளி, வெண்டைக்காய், கொத்தவரை உள்ளிட்ட காய்கறிகள் அழுகி விட்டதால் சந்தைக்கு இதன் வரத்து குறைந்தது.

மேலும், கார்த்திகை மாதம் என்பதால் ஐய்யப்ப பக்தர்கள் உணவில் அதிகம் பயன்படுத்தும் காய்கறிகளின் வரத்து தேவைக்கு ஏற்ப இல்லை. இதற்கிடையே குறைந்த அளவே வந்த காய்கறிகளை வியாபாரிகள் போட்டி போட்டி வாங்கிச் சென்றனர். புதன்கிழமை 14 கிலோ கொண்ட தக்காளி ஒரு பெட்டி ரூ.500, 30 கிலோ கொண்ட வெள்ளை கத்திரிக்காய் ஒரு பை ரூ.1500, டிஸ்கோ கத்திரிக்காய் ஒரு பை ரூ.430, வெண்டைக்காய் கிலோ ரூ.45, கொத்தவரை ரூ.35, தட்டப்பயிர் ரூ.45, சின்னவெங்காயம் கிலோ ரூ.58, முருங்கை கிலோ ரூ.100-க்கு என விற்பனையாயின. கடந்த வாரம் வெண்டைக்காய் மற்றும் தட்டப்பயிர் ரூ.10 மற்றும் 12-க்கு விற்பனையானது. ஆனால் இந்த வாரம் அவை கிலோ ரூ.45-க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

**சோத்துப்பாறை அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

பெரியகுளம் அருகே உள்ள சோத்துப்பாறை அணையிலிருந்து பாசனத்துக்கு மாவட்ட ஆட்சியர் என்.வெங்கடாச்சலம் புதன்கிழமை தண்ணீரை திறந்து வைத்தார்.

இந்த அணையின் மொத்த உயரமான 126.28 அடிக்கு நீர் நிரம்பி வழிகிறது. அணைக்கு விநாடிக்கு 80 கனஅடி நீர் வரத்து உள்ளது. இந்த நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. அணையில் மொத்தம் 100.22 மில்லியன் கனஅடி நீர் உள்ளது.

இதையடுத்து அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீரை மாவட்ட ஆட்சியர் புதன்கிழமை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அதிமுக செயலர் டி.சிவக்குமார், லாசர் எம்.எல்.ஏ, பெரியகுளம் நகர்மன்றத் தலைவர் ஓ.ராஜா, ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் எம்.செல்லமுத்து, ஒன்றியக் குழு உறுப்பினர் மேல்மங்கலம் ஆர்.லட்சுமணன், மாவட்ட அவைத் தலைவர் நல்லவேலுச்சாமி, அணைத் திட்ட செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர் செல்வம்,

உதவி பொறியாளர் மல்லிகா மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த அணையின் நீர் மூலம் இப்பகுதியில் உள்ள 2865 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. வரும் மார்ச் 15 ஆம் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்த ஆட்சியர் என்.வெங்கடாச்சலம், நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

### அணைகளின் நீர்மட்டம் உயர்வு

தேனி மாவட்டம் மற்றும் பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது.

மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு பெய்த மழை அளவு வருமாறு (மி.மீட்டரில்)ஆண்டிபட்டி- 4.2, வீரபாண்டி- 36, அரண்மனைப்புதூர்- 13.6, போடி- 6.4, பெரியகுளம்- 11, மஞ்சளாறு- 7, சோத்துப்பாறை- 7, உத்தமபாளையம்- 3, கூடலூர்- 5.3, வைகை அணை நீர்பிடிப்பு பகுதி- 2, பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதி- 8.2, தேக்கடி- 7.6.

அணைகளின் நீர்மட்டம்: பெரியாறு அணை நீர்மட்டம் புதன்கிழமை 131.10 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 788 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 511 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வைகை அணையின் நீர்மட்டம் 56.53 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 1,250 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர் திட்டங்களுக்காக விநாடிக்கு 60 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

### விலை உயர்வு: மானாமதுரை பகுதிக்கு தக்காளி வரத்து குறைவு

விலை உயர்வால் மானாமதுரை பகுதிக்கு தக்காளி வரத்து குறைந்தது.

மழை காரணமாக தக்காளியின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தினசரி காய்கறிச் சந்தையில் கிலோ ரூ. 60 லிருந்து ரூ. 70 வரைக்கும்

தரத்துக்கேற்றவாறு விற்பனையாகிறது. மானாமதுரை காய்கறிக் கடைகளுக்கு மதுரையிலிருந்து தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகிறது.

மழையால் விளைச்சல் பாதிப்பு, அழுகல் போன்ற காரணங்களால் தக்காளி வரத்து குறைந்துள்ளதால் அதன் கொள்முதல் விலை உயர்ந்துள்ளது. இதனால், சில்லரை விற்பனையில் கூடுதல் விலைக்கு தக்காளி விற்பனை செய்யப்படுவதாக காய்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தக்காளியின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் பொதுமக்கள் உணவுத் தேவைக்கு குறைவான அளவில் தக்காளி வாங்கிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மானாமதுரை பகுதியில் உள்ள பல ஹோட்டல்களில் தக்காளியை உபயோகப்படுத்தி செய்யும் சட்னி உள்ளிட்ட குழம்பு வகைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால் ஹோட்டல்களுக்கு வரும் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### சிவகாசியில் 103 மி.மீ. மழை

விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசியில் அதிகபட்சமாக 103 மி.மீ. மழை பெய்துள்ளது. இம்மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் புதன்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழை விவரம் (மி.மீ.): அருப்புக்கோட்டை-46, சாத்தூர்-45, ஸ்ரீவில்லிபுத்தூர்-9.20, சிவகாசி-103, விருதுநகர்-93.80, திருச்சுழி-7.20, ராஜபாளையம்-80, காரியாபட்டி-82, வத்திராயிருப்பு-2, பிளவக்கல்-0.10, வெம்பக்கோட்டை- 44.40, கோவிலாறு-63.20 என மொத்தம் 575.80 மி.மீ. மழை பெய்துள்ளது. சராசரியாக 47.98 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

அணைகளின் நீர்மட்டம் (மீட்டரில்): பிளவக்கல் 14-க்கு 13.05, கோவிலாறு 13-க்கு 8.05, கோல்வார்பட்டி 5.50-க்கு 1.71, ஆனைக்குட்டம் 7.50-க்கு 5.50, குல்லூர்சந்தை 2.45-க்கு 1.91, சாஸ்தாகோயில் 10-க்கு 10.

### தொண்டியில் 57 மி.மீ. மழை

தொண்டியில் 57.05 மி.மீ மழை பெய்துள்ளது.

கனமழை எச்சரிக்கை அறிவிப்பு காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் இம்மாதம் 16, 17 ஆகிய தேதிகளில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்விரு நாள்களிலும் மழை எதுவும் பெய்யவில்லை.

இருப்பினும் செவ்வாய்க்கிழமை இரவு ராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் பலத்த மழை பெய்தது.

மழையளவு ( மில்லி மீட்டரில்) கமுதி 7.03, முதுகுளத்தூர் 28.04, பாம்பன் 0.8, பரமக்குடி 36, திருவாடானை 6.04, தொண்டி 57.05, பள்ளமோர்குளம் 34, மண்டபம் 2, வட்டாணம் 25, தீர்த்தாண்டதானம் 29, ஆர்.எஸ்.மங்கலம் 23, கடலாடி 40, வாலிநோக்கம் 53.08. மாவட்டத்தின் மொத்த மழையளவு 353.40. சராசரி மழையளவு 22.09.

**ராமேசுவரம் மீனவர்கள்: 2 நாள்களுக்கு பின்பு மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்**

பாக் நீரிணைப்பு பகுதியில் வீசிய சூறாவளியின் வேகம் குறைந்ததால் ராமேசுவரம், மண்டபம், பாம்பன் மீனவர்கள் இரண்டு நாட்களுக்கு பின்னர் புதன்கிழமை காலையில் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டல நிலை உருவானதால் பாக் நீரிணைப்பு பகுதியில் பலத்த சூறாவளி வீசி வந்தது. இதனையொட்டி ராமேசுவரம், மண்டபம், பாம்பன் கடலோரப் பகுதிகளில் சூறாவளியின் தாக்கம் இருந்தது.

இதனால், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் நந்தகுமார் உத்தரவின்பேரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இப்பகுதியிலுள்ள மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவேண்டாம் என மீன்துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

மேலும் மீன்பிடிக்க செல்வதற்கான அனுமதி சீட்டை வழங்காமல் கடந்த திங்கள் கிழமை நிறுத்திவிட்டனர்.

இந்த நிலையில் பாக் நீரிணைப்புப் பகுதியில் சூறாவளிக் காற்றின் வேகம் செவ்வாய்க்கிழமை இரவோடு வலுவிழந்தது.

இதையடுத்து மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதற்கு மீன்துறை அதிகாரிகள் புதன்கிழமை அனுமதி வழங்கினர். அதன்பேரில் மீனவர்கள் மீன்பிடி அனுமதி சீட்டைப் பெற்றுக்கொண்டு புதன்கிழமை மீன்பிடிக்கச் சென்றனர்.

ராமேசுவரம் பகுதியில் இருந்து 651 படகுகளிலும், மண்டபம் பகுதியில் இருந்து 300-க்கும் மேற்பட்ட படகுகளிலும், பாம்பன் பகுதியில் இருந்து 50-க்கும் மேற்பட்ட படகுகளிலும் சேர்த்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் இரு நாள்களுக்குப் பின்னர் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

**வயலில் களையெடுக்க ஆள்கள் பற்றாக்குறை: விவசாயிகள் தவிப்பு**

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள வயல்களில் களை எடுக்க ஆள்கள் கிடைக்காததால் விவசாயிகள் தவிக்கின்றனர்.

திருப்புல்லாணி, உத்தரகோசமங்கை, ரெகுநாதபுரம், தினைக்குளம் பகுதிகளில் உள்ள நெல் வயல்களில் தொடர் மழையினால் மழைநீர் தேங்கியுள்ளது. இதை பயன்படுத்தி விவசாயிகள் களை எடுத்து வருகின்றனர்.

விதைக்கப்பட்ட இடத்தில் நெற்பயிற்களின் ஊடாக வளர்ந்து வரும் காரை புற்கள், அமலை, நெல் போன்று வளர்ந்து வரும் நெசவேர், அருகு போன்றவைகளை கையினால் பிடுங்கி வரப்பு ஓரங்களில் சேகரித்து வருகின்றனர். ஆனால், களையெடுக்க போதிய ஆள்கள் கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயி ஒருவர் கூறுகையில், காலை 7மணி முதல் மாலை 3 மணி வரை பெண்கள் களை எடுக்க வேண்டும். அவர்களுக்கு தினக்கூலியாக ரூ.200 வழங்கப்படுகிறது. ஊராட்சி பகுதிகளில் 100 நாள்கள் வேலைக்காக பெண்கள் செல்வதால் களை எடுப்பதற்கு பெண்கள் வருவதில்லை.

மழை பெய்த மறுநாள்களில் களை எடுப்பதற்கு ஆள்கள் கிடைக்காமல் குடும்பத்தில் உள்ள உறவுக்கார பெண்களைக் கொண்டு களை எடுத்து வருகிறோம். வயல்வெளிகளில் வேலை பார்க்க முன்பு போல் வேலைக்கு

ஆள்கள் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் கூலியை உயர்த்தி விடுகின்றனர் என்றார்.

## வைகை ஆற்றில் தண்ணீர் திறக்க பரமக்குடி விவசாயிகள் கோரிக்கை

பரமக்குடி பகுதி விவசாய பணிகளுக்காக வைகை ஆற்றில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என பொதுமக்களும் விவசாயிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளாக ராமநாதபுரம் மாவட்டத்தில் போதிய மழை பெய்யாததாலும், வைகை ஆற்றில் தண்ணீர் திறக்கப்படாததாலும் விவசாயப்பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் நிலத்தடி நீர் ஆதாராம் வெகுவாக குறைந்துள்ளது.

வெள்ளக்காலங்களில் மழை நீரை மாவட்டத்தில் உள்ள அனைத்து கண்மாய்களுக்கும் கொண்டு செல்லும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ. 78 கோடியில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளும் வறண்டு காணப்படுகின்றன. தற்போது கனமழை பெய்யும் என்ற அறிவிப்பால் கண்மாய்கள் நிறைந்து விவசாயப் பணிகள் மேற்கொள்ளலாம் என எதிர்பார்த்திருந்த பரமக்குடி பகுதி விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

வறட்சியான நிலையில் உள்ள இப்பகுதி விவசாயிகள் மானாவாரிப் பயிராக 12 ஆயிரம் ஏக்கரில் நெல்பயிர் சாகுபடி செய்துள்ளனர்.

எனவே விவசாயத்தை பாதுகாப்பதற்காகவும், குடிநீர் தேவைக்காகவும் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு உரிய பங்கீட்டு நீரை வைகை ஆற்றில் திறந்து விட மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் மற்றும் பல்வேறு அமைப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சோலையாறு அணை நீர்மட்டம் 98 அடியாக குறைவு

போதுமான மழை இல்லாததால், வால்பாறையில் உள்ள சோலையாறு அணை நீர்மட்டம் 98 அடியாக குறைந்தது.

பரம்பிக்குளம்- ஆழியாறு நீர்பாசனத் திட்டத்தின் முக்கிய அணையாக கருதப்படும் சோலையாறு அணையில் இருந்து வெளியேறும் தண்ணீர் மூலம் 4 மாவட்டங்களைச் சேர்ந்த பல லட்சம் விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த ஆண்டு போதுமான அளவுக்கு பருவ மழை பெய்யாததால், அணைக்கு நீர்வரத்து குறைந்து காணப்பட்டது.

160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையில் கடந்த ஜூலை 28-ஆம் தேதி 149 அடி நீர் இருந்தது. அதன்பிறகு சாரல் மழையாக மட்டுமே பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் கணிசமாக குறைந்து புதன்கிழமை 98 அடியாக இருந்தது.

புதன்கிழமை காலையுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்) சோலையாறு 2, அப்பர்நீராறு 20, லோயர்நீராறு 25.

## வடகிழக்குப் பருவ மழை எதிரொலி: திருமூர்த்தி, அமராவதி அணைகளின் நீர்மட்டம் உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்து வரும் வடகிழக்குப் பருவ மழை காரணமாக உடுமலை அருகே உள்ள திருமூர்த்தி, அமராவதி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

**திருமூர்த்தி அணை:**

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தில் மொத்தம் உள்ள 4 லட்சம் ஏக்கர்கள் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆண்டுக்கு 2 மண்டலங்கள் வீதம் திருமூர்த்தி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள சுமார் 1 லட்சம் ஏக்கர்களுக்கு முறை வைத்து தண்ணீர் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், அக்டோபர் 12-ஆம் தேதி, 4-ஆம் மண்டலப் பாசனப் பகுதிகளுக்கு திருமூர்த்தி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

ஆனால். இந்த நீர் கடைமடைப் பகுதிகளை சென்றடையவில்லை என விவசாயிகள் புகார் கூறி வந்தனர்.

இந்நிலையில், வடகிழக்குப் பருவ மழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. இதையடுத்து, கடைமடைப் பகுதிகளான வெள்ளக்கோவில், குண்டடம் பாசனப் பகுதிகளுக்கு விநாடிக்கு 500 கனஅடி வீதம் 10 நாள்களுக்கு திருமூர்த்தி அணையில் இருந்து பிரதான கால்வாயிலில் புதன்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது.

**அணை நிலவரம்:**

60 அடி கொள்ளளவு கொண்ட திருமூர்த்தி அணையில் புதன்கிழமை காலை 7 மணி நிலவரப்படி நீர்மட்டம் 53.05 அடியாக இருந்தது. காண்டூர் கால்வாய் மூலம் 950 கன அடியும், பாலாறு மூலம் 8 கனஅடியும் அணைக்கு நீர் வந்து கொண்டிருந்தது.

**அமராவதி அணை:**

அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய, புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும், நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்கி வருகிறது.

இந்நிலையில், கடந்த 10 நாள்களுக்கும் மேலாக பெய்து வரும் வடகிழக்குப் பருவ மழையால் தேனாறு, பாம்பாறு, சின்னாறு ஆகிய நீர்பிடிப்புப் பகுதிகளில் இருந்து அணைக்கு நீர்வரத்து அதிகரித்து. இதனால், புதன்கிழமை மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 73 அடியை எட்டியது. இதைத் தொடர்ந்து பழைய, புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**அணை நிலவரம்:**

90 அடி கொள்ளளவு கொண்ட அணையில் புதன்கிழமை காலை 7 மணி நிலவரப்படி நீர்மட்டம் 72.80 அடியாக இருந்தது. அணைக்கு வரத்தாக 1,241

கனஅடி இருந்தது. அணையில் இருந்து 14 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

## 40 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக் பைகளை விற்பனை செய்தால் அபராதம்: ஆட்சியர்

**ஈரோடு மாவட்டத்தில் 40 மைக்ரான் அளவுக்கு குறைவான பிளாஸ்டிக் பைகளை விற்பனை செய்தால் அபராதம் விதிக்கப்படும் என்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

ஈரோடு மாவட்டத்தில் 40 மைக்ரான் அளவுக்கு குறைவான பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை விதிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் பேசியதாவது:

பேரூராட்சிகளில் 40 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக்கை ஒழித்திட நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைகள், கப், தெர்மாகோல் தட்டுகள், அலுமினியம் பூசப்பட்ட ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருள்கள், ஹோட்டலில் உணவுப் பொருள்களை கட்டித்தரக்கூடிய பிளாஸ்டிக் பொருள்கள், ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பாலி புரொப்லீன் பைகள் போன்ற பிளாஸ்டிக் பொருள்களின் தீய விளைவுகள் குறித்து பொதுமக்களிடம் உள்ளாட்சி அமைப்புகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அனைத்து அரசுப் பணியாளர்களும் இணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

40 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக்கை உபயோகிப்பவர்கள், வியாபாரிகள், பொறுப்பற்ற முறையில் நீர் நிலைகளில், கழிவுநீர் கால்வாய்களில் குப்பைகளை கொட்டுபவர்கள், கழிவுகளைத் தரம் பிரித்து

ஒப்படைக்காதவர்கள் மற்றும் பொது இடங்களில் குப்பைகளை கொட்டும் நிறுவனங்கள், கடைகளுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் பழனிசாமி உள்பட அனைத்து துறை அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

**சாத்தனூர் அணை நீர்மட்டம் 109 அடி**

திருவண்ணாமலையை அடுத்த சாத்தனூர் அணையின் நீர்மட்டம், புதன்கிழமை 109.15 அடியாக உயர்ந்தது.

தொடர் மழை காரணமாக, சாத்தனூர் அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அணையின் மொத்த நீர்மட்ட உயரமான 119 அடியில், புதன்கிழமை காலை 109.15 அடிக்கு நீர்மட்டம் உயர்ந்தது.

அணையின் மொத்த நீர் கொள்ளளவான 7,321 மில்லியன் கன அடியில் புதன்கிழமை காலை 5,274 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கியிருந்தது. அணைக்கு விநாடிக்கு 2,454 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இந்நிலையில், புதன்கிழமை மாலை மாவட்டத்தில் பரவலாக லேசான மழை பெய்தது. எனவே, அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பாலின் கொழுப்பு தரம் அளவிடும் கருவிகள்**

பெரணமல்லூர் அருகே நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில், 2 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.1.32 லட்சம் மதிப்பிலான பாலின் கொழுப்பு தரம் அளவிடும் பகுப்பாய்வு கருவிகள் புதன்கிழமை வழங்கப்பட்டன.

பெரணமல்லூர் அடுத்த கோட்டுப்பாக்கம் கிராமத்தில் நடைபெற்ற 62-வது கூட்டுறவு வார விழாவில் மாவட்ட ஆட்சியர் ஞானசேகரன் தலைமை வகித்தார்.

வந்தவாசி தொகுதி எம்எல்ஏ குணசீலன், கூட்டுறவு சங்க துணைப் பதிவாளர் சரவணன், ஆவின் துணை பொதுமேலாளர் கணேசன், மாவட்ட கூட்டுறவு சங்க இணைப் பதிவாளர் அமலதாஸ், மாவட்ட கால்நடைத் துறை இணை

இயக்குநர் கந்தசாமி, கூட்டுறவு வங்கித் தலைவர் வேணுகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை பதிவாளர் பால்வளம் முனிராஜ் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் கலந்து கொண்டு, ரூ.1.32 லட்சம் மதிப்பிலான பாலின் கொழுப்பு தரத்தை அளவிடும் பகுப்பாய்வு கருவிகள் இரண்டை கோட்டுப்பாக்கம் பகுதியில் செயல்பட்டு வரும் இரண்டு பால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கினார்.

மேலும், 16 பேருக்கு தாதுஉப்பு கலவையும், 11 பேருக்கு தீவன விதைகளையும் வழங்கிப் பேசினார். தொடர்ந்து கறவை மாடுகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தலைவர் பாஸ்கர்ரெட்டியார் மடம் கூட்டுறவு வங்கித் தலைவர் சந்திரசேகர், ஆவின் மேலாளர் முனுசாமி, ஊராட்சித் தலைவர்கள் பெருமாள், ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஆவின் விரிவாக்க அலுவலர் நரசிம்மன் நன்றி கூறினார்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் குறைந்தது**

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் குறைந்தது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து வருகிறது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 8,081 கன அடியாக இருந்தது, புதன்கிழமை காலை நொடிக்கு 7,271 கன அடியாகக் குறைந்தது. நீர்வரத்து குறைந்தாலும், பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு குறைவாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் 85.68 அடியாக உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு ஒரு வாரத்துக்கு பிறகு புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் நொடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்இருப்பு 47.68 டி.எம்.சி.

**நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் நவம்பர் 20 ஆம் தேதி நடைபெறுகிறது.

சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் நவம்பர் 20 ஆம் தேதி காலை 10.45 மணிக்கு மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமையில் ஆட்சியரக (முதல் தள) கூட்ட அரங்கத்தில் நடைபெறுகிறது.

இக் கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை சம்பந்தமான தங்கள் குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவிக்கலாம் என ஆட்சியர் அலுவலகம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 4 இடங்களில் கால்நடை மருந்தகம் திறப்பு

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டத்தில் புதன்கிழமை காணொலிக் காட்சி மூலம் நான்கு இடங்களில் கால்நடை மருந்தகத்தை முதல்வர் திறந்து வைத்தார். கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நபார்டு திட்டத்தின் கீழ் அரவக்குறிச்சி வட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட கால்நடை மருந்தகக் கட்டடங்களை தமிழக முதல்வர் காணொலிக் காட்சியில் புதன்கிழமை திறந்து வைத்தார்.

இதையொட்டி கரூர் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி, அரவக்குறிச்சி வட்டம் வெஞ்சமாங்கூடலூர் ஊராட்சியில் ரூ. 21 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கால்நடை மருந்தகத்தைப் பார்வையிட்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

கரூர் மாவட்டத்தில் ஈச நத்தம் ஊராட்சியில் ரூ. 21 லட்சம் மதிப்பீட்டிலும், குப்பம் ஊராட்சியில் ரூ. 11 லட்சம் மதிப்பீட்டிலும்,கடவூர் வட்டம், பாலவிடுதி ஊராட்சியில் ரூ. 21 லட்சம் மதிப்பீட்டிலும் புதிதாக கால்நடை மருந்தக கட்டடம் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தமிழக முதலவர் இன்று திறந்து வைத்துள்ளார். இதனை பொதுமக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் தாந்தோணி ஒன்றியக்குழு உறுப்பினர் விஜயபாஸ்கர், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் பழனிவேல், கரூர் ஊராட்சி ஒன்றியக்குழு

தலைவர் எஸ். திருவிகா, காகித ஆலை பேரூராட்சித் தலைவர் இன்ஜீனியர் கமலக்கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விவசாயிகள் குறைகேட்பு முகாம் நவ. 25-க்கு மாற்றம்

புதுக்கோட்டையில் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்பு முகாம் வரும் 25 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு முகாம் வெள்ளிக்கிழமை (நவ. 20) காலை 10 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நிர்வாகக் காரணங்களால் அந்த முகாம் வரும் 25-ம் தேதி காலை 10 மணியளவில் ஆட்சியர் சு. கணேஷ் தலைமையில் மாவட்ட ஆட்சியரகக் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில், பல்வேறு துறை அரசு அலுவலர்கள் பங்கேற்று விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு விளக்கம் அளிக்க உள்ளனர்.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இந்த முகாமில் பங்கேற்று விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை மட்டும் தெரிவித்து பயன்பெறலாம்.

## நெல் சாகுபடி பகுதியில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள்

மழை நீர் தேங்கியுள்ள நெல் சாகுபடி பகுதியில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் மு. சுப்பையா வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பட்டுக்கோட்டை வட்டாரத்தில் நடப்புப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா, தாளடிப் பயிர்கள் நடவு முதல் தூர்வெடிக்கும் நிலையில் உள்ளன. தற்போது பெய்துள்ள வடகிழக்குப் பருவமழை நெற்பயிருக்கு ஏற்றதாக உள்ளது. ஒரு சில இடங்களில் மழை நீர் வயலில் தேங்கியும் காணப்படுகிறது. இவ்வாறு நீர் தேங்காமலிருக்க விவசாயிகள் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.

மழையால் நெல் பயிர்களுக்கு பாக்டீரியா, இலைக்கருகல், இலைக்கீறல் போன்ற நோய்களின் அறிகுறிகள் தென்பட்டால், ஏக்கருக்கு 120 கிராம் வீதம் ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்டுடன் டெட்ராசைக்கிளின் கலந்த மருந்துடன், காப்பர் ஆக்ஸ் குளோரைடு 500 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும். நோயின் அறிகுறி காணப்பட்டால் தழைச்சத்து உரம் இடுவதைத் தவிர்க்க வேண்டும்.

நீர் வடிந்த பிறகு பயிரின் வளர்ச்சி சரியாக இல்லாத இடங்களில் வளர்ச்சியை மேம்படுத்த ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ சிங்க் சல்பேட், 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை முதல் நாள் இரவு கலந்து வைத்து மறுநாள் வயலில் மேலுரமாக இட வேண்டும்.

முழுமையாக நீர் வடியாமல் பாதியளவு மட்டுமே நீர் வடிந்துள்ள இடங்களில் பயிர்கள் மஞ்சள் மற்றும் பழுப்பு நிறமாக மாறி துத்தநாகம் மற்றும் தழைச் சத்து பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. இதைப் போக்க ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ யூரியா, 1 கிலோ சிங்க்சல்பேட் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இதையே மீண்டும் 10 நாட்கள் இடைவெளியில் மறுமுறை தெளிக்க வேண்டும். இம்மாதிரியான நிலையில் பயிருக்கு மேலுரம் இடுவதைத் தவிர்க்க வேண்டும்.

பயிர் சூல்பிடிக்கும் பருவம், பூக்கும் பருவத்தில் இருந்தால் ஏக்கருக்கு 4 கிலோ டி.ஏ.பி. உரத்தை 20 லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து, மறுநாள் வடிகட்டி இந்த கரைசலுடன் 2 கிலோ யூரியா, 2 கிலோ பொட்டாஷ் உரத்தை 180 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலைகளில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். 10 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்க வேண்டும்.

### சம்பா, தாளடி நெல் சாகுபடி விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்ய அழைப்பு

சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் வரும் டிசம்பர் இறுதிக்குள் பயிர்க் காப்பீடு செய்யலாம் என்றார் பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் மு. சுப்பையா.

இதுகுறித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பயிர்களுக்கு சேதம் ஏற்படும்போது விவசாயிகளுக்கு காப்பீடு மற்றும் நிதியுதவி செய்வது தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பட்டுக்கோட்டை வட்டாரத்தில் சுமார் 2,420 எக்டரில் சம்பா மற்றும் தாளடிப் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர்ச் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், குத்தகை சாகுபடி செய்துள்ளோர் அனைவரும் பயிர்க் காப்பீடு திட்டத்தில் சேரலாம்.

பயிர்க் கடன் பெறும் விவசாயிகள் காப்பீடு பிரிமியத் தொகையை சம்பந்தப்பட்ட வங்கிகள் அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் செலுத்தலாம். பயிர்க் கடன் பெறாத மற்ற விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வணிக வங்கிகள் அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் பிரிமியத் தொகையை செலுத்தலாம்.

உத்தரவாத மகசூல் ரூ. 14,904-க்கு காப்பீடு செய்ய, கடன் பெறும் மற்றும் கடன் பெறாத இதர விவசாயிகள் 50 சதம் மானியம் போக பிரிமியத் தொகையாக ஏக்கருக்கு ரூ. 149 செலுத்த வேண்டும். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் 55 சதம் மானியம் போக பிரிமியத் தொகையாக ஏக்கருக்கு ரூ. 134 செலுத்த வேண்டும். கடன் பெறுபவர்கள் உத்தரவாத மகசூலின் மதிப்பு வரை காப்பீடு செய்து கொள்ளலாம். ஆனால் கூடுதல் தொகை மானியம் கிடையாது. கூடுதல் காப்பீடு தொகை ரூ. 13,040-க்கு பிரிமியம் ரூ. 2,999 செலுத்த வேண்டும். எனவே, சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் உடனே அருகிலுள்ள வங்கியில் பிரிமியம் செலுத்தி பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வங்கிகள் மற்றம் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் காப்பீடு செய்ய வரும் டிசம்பர் 15-, கடன் பெறும் விவசாயிகள் காப்பீடு செய்ய வரும் டிசம்பர் 31-ம் தேதியும் கடைசி நாள். மேலும் உதவி வேளாண் அலுவலரை அல்லது 04373-235037 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் நிவாரணம் வழங்க வலியுறுத்தல்**

பெரம்பலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பருத்தி, மக்காச் சோளம், சின்ன வெங்காயத்துக்கு ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என, மக்கள் நலக்கூட்டியக்கம் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் குரும்பலூர், அம்மாபாளையம், எசனை, அரசலூர், அன்னமங்கலம் பகுதிகளில் மக்காச்சோளம், சின்ன வெங்காயம், பருத்தி ஆகிய பயிர்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பையும், விசுவக்குடி நீர்த்தேக்கத்தையும் மக்கள் நலக்கூட்டணியைச் சேர்ந்த ம.தி.மு.க மாவட்ட செயலர் செ. துரைராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலர் வீ. ஞானசேகரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயற்குழு உறுப்பினர் என். செல்லதுரை, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலர் ஜெ. தங்கதுரை உள்ளிட்டோர் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டனர். பின்னர் அவர்கள் கூறியது:

விசுவக்குடி நீர்த்தேக்கத்தின் எதிரே நிலங்களை கூடுதலாகக் கையகப்படுத்தி சுற்றுலாப் பயணிகள் மற்றும் பார்வையாளர்களுக்கான அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வேண்டும். மழையால் பாதிக்கப்பட்ட பருத்தி, மக்காச்சோளம், சின்ன வெங்காய பயிர்களுக்கு ஏக்கருக்கு தலா ரூ. 20 ஆயிரம் இழப்பீட்டுத் தொகையாக மாவட்ட நிர்வாகம் பெற்றுத் தர வேண்டும். இந்தக் கூட்டாய்வு மூலம் மக்கள் நலக் கூட்டணி மாநில அரசுக்குப் பரிந்துரைக்கும் முழுமையான அறிக்கையை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தமிழக அரசுக்கு அனுப்ப உள்ளது என்றனர்.

**நீர்வரத்து குறைந்தது: அணைகளிலிருந்து உபரிநீர் திறப்பு நிறுத்தம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை தணிந்ததையடுத்து அணைகளுக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால், அனைத்து அணைகளிலிருந்தும் உபரிநீர் வெளியேற்றப்படுவது புதன்கிழமை முற்றிலும் நிறுத்தப்பட்டது.

இம்மாவட்டத்தில் அனைத்து அணைகளும் நிரம்பிய நிலையில், தொடர்ந்து மக்களை அச்சுறுத்திய மழை கடந்த 3 நாள்களாக சற்று தணிந்தது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக குறைந்துள்ளது.

இதைத்தொடர்ந்து, வெள்ள அபாயம் நீங்கியதால், அணைகளிலிருந்து முன்னெச்சரிக்கையாக வெளியேற்றப்பட்ட உபரிநீர் திறப்பு தற்போது நிறுத்தப்பட்டு ஆறுகளில் வெள்ளம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அணைகளின் நீர்மட்டம்: புதன்கிழமை காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையில் நீர்மட்டம் 44.90 அடி, அணைக்கு நீர்வரத்து 285 கன அடி, பெருஞ்சாணி அணையில் நீர்மட்டம் 74.11 அடி, நீர்வரத்து 290 கன அடி, நீர்திறப்பு 305 கன அடி, சிற்றாறு 1 அணையில் நீர்மட்டம் 15.02 அடி, சிற்றாறு 2 அணையில் நீர்மட்டம் 15.12 அடி, பொய்கை அணையின் நீர்மட்டம் 17.30 அடி, மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடி என்ற அளவில் இருந்தது.

மீண்டும் மழை: பிற்பகலில் மாவட்டத்தில் பேச்சிப்பாறை, சிற்றாறு உள்ளிட்ட அணைப் பகுதிகளிலும், மார்த்தாண்டம், தக்கலை, குலசேகரம், அருமனை, திற்பரப்பு உள்ளிட்டப் பகுதிகளிலும் மிதமான மழை பெய்தது.

**திருச்செந்தூரில் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனை**

திருச்செந்தூர் பகுதியில் காலாவதியான உணவுப் பொருள்கள் மற்றும் தின்பண்டங்கள் விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்து உணவுப் பாதுகாப்பு துறை அதிகாரிகள் சோதனையிட்டனர்.

மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை மற்றும் குடிமைப் பொருள்கள் வழங்கல் துறை ஆகியன சார்பில் மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் தங்கவிக்னேஷ், வட்டார உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் பொன்முத்து ஞானசேகர், மாரியப்பன், சண்முகசுந்தரம், சிவபாலன் உள்ளிட்டோர், திருச்செந்தூர் கோயில் வாசல் பகுதியில் உள்ள ஹோட்டல்கள், அன்னதானம் நடைபெறும் இடங்கள் மற்றும் பிரசாதம் தயாரிக்கும் இடங்களில் சோதனை நடத்தினர்.

பாதுகாப்பான உணவு தயார் செய்தல் மற்றும் விற்பனை செய்வது குறித்த அறிவிப்பு துண்டுப் பிரசுரம் வழங்கினர். மேலும் உணவகங்களில் பணிபுரிபவர்கள் கட்டாயம் மருத்துவச்சான்று பெற்றிருக்கவேண்டும் எனவும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் எச்சரித்தனர்.

**திருச்செந்தூரில் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனை**

திருச்செந்தூர் பகுதியில் காலாவதியான உணவுப் பொருள்கள் மற்றும் தின்பண்டங்கள் விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்து உணவுப் பாதுகாப்பு துறை அதிகாரிகள் சோதனையிட்டனர்.

மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை மற்றும் குடிமைப் பொருள்கள் வழங்கல் துறை ஆகியன சார்பில் மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை நியமன

அலுவலர் தங்கவிக்னேஷ், வட்டார உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் பொன்முத்து ஞானசேகர், மாரியப்பன், சண்முகசுந்தரம், சிவபாலன் உள்ளிட்டோர், திருச்செந்தூர் கோயில் வாசல் பகுதியில் உள்ள ஹோட்டல்கள், அன்னதானம் நடைபெறும் இடங்கள் மற்றும் பிரசாதம் தயாரிக்கும் இடங்களில் சோதனை நடத்தினர்.

பாதுகாப்பான உணவு தயார் செய்தல் மற்றும் விற்பனை செய்வது குறித்த அறிவிப்பு துண்டுப் பிரசுரம் வழங்கினர். மேலும் உணவகங்களில் பணிபுரிபவர்கள் கட்டாயம் மருத்துவச்சான்று பெற்றிருக்கவேண்டும் எனவும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் எச்சரித்தனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு**

விழுப்புரத்தில் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டமும் ஆண்பாக்கத்தில் நடைபெறவிருந்த மக்கள் குறைதீர் கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பு: வானூர் வட்டம் ஆண் பாக்கம் கிராமத்தில் புதன்கிழமை (நவ.18) மக்கள் குறைதீர் கூட்டம், ஆட்சித் தலைவர் எம்.லட்சுமி தலைமையில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தொடர் மழை காரணமாக, இக்கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு: விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில், மாதத்தின் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நடைபெறுவது வழக்கம். அந்த வகையில், நவம்பர் 20ஆம் தேதி வெள்ளிக்கிழமை குறைகேட்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். ஆனால், நிர்வாகக் காரணங்களால், விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது. கூட்டத்துக்கான தேதி பிறகு அறிவிக்கப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை நிவாரணம்: அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வழங்கினார்**

பண்ருட்டி வட்டம், அண்ணாகிராமம் ஒன்றியத்தில் மழை, வெள்ளத்தால் உயிரிழந்த கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு வருவாய்த் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் புதன்கிழமை நிவாரண உதவி வழங்கி வழங்கினார்.

அண்ணாகிராமம் பகுதியில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில், வருவாய்த் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையிலான குழுவினர் 8-ஆவது நாளாக பார்வையிட்டு மீட்புப் பணிகளையும், சேத மதிப்பையும் கணக்கிடும் பணியை தீவிரப்படுத்தினர்.

புதுப்பேட்டை பேரூராட்சியில் கணிக்கர் நகர் மற்றும் வார்டு பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த வீடுகள், நெசவுத்தறி கூடங்களை பார்வையிட்டு அமைச்சர் ஆறுதல் கூறினார்.

பின்னர், அம்மாபேட்டை கிராமத்தில் மழை, வெள்ளத்தால் கால்நடைகளை இழந்த தயாநிதி (பண்ருட்டி), தேவிகாராமன் (பண்ரக்கோட்டை) ஆகியோருக்கு தலா ரூ.30,000-க்கான காசோலைகளை வழங்கினார்.

ஒரையூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கத் தேவையான வசதிகள் தயார் நிலையில் உள்ளதா என்பதை நேரில் பார்வையிட்டு அமைச்சர் ஆய்வு செய்தார். மேலும், ஒரையூர் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு உள்பட்ட 42 கிராமங்களில் சுகாதாரப் பணிகளையும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவர்களை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் அறிவுறுத்தினார்.

ஒரையூர் பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் கிளை ஆறான மலட்டாற்றினை பார்வையிட்டு, தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளுமாறும், அழகுபெருமாள்குப்பம் பொதுமக்களின் கோரிக்கைகளின்படி, விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் பைத்தாம்பாடி, அவியனூர், மேல்தனியாளம்பட்டு ஏரிகளில் இருந்து வெளியேறும் நீரினை மலட்டாற்றில் திருப்பிவிடும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொதுப்பணித் துறையினருக்கு உத்தரவிட்டார். மேலும், காவனூர் ஊராட்சியில் தென்பெண்ணை ஆற்றின் கரைப்பகுதியில் தடுப்புச்சுவர் கட்டவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

எனதிரிமங்கலம், கரும்பூர், கொரத்தி, திருத்துறையூர், கட்டமுத்துபாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு சென்று பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார். கொரத்தி ஊராட்சி குடியிருப்பு பகுதியில் செல்லும் தவிட்டமன் ஓடை பாலத்தை பார்வையிட்ட அமைச்சர், அதிக தண்ணீர் செல்லும் வகையில்

பாலத்தை அகலப்படுத்துமாறு உள்ளாட்சித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வுகளின் போது, வேளாண் துறை இயக்குநர் ராஜேந்திரன், ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் லட்சுமிபதி, பொதுப்பணித் துறை (நீர்வள ஆதார அமைப்பு) துணை கண்காணிப்பு பொறியாளர் இரா.ரங்கசாமி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சுந்தரிமுருகன், துணைத் தலைவர் எம்.சி.சம்மந்தம், அண்ணாகிராமம் ஒன்றியச் செயலர் என்.டி.கந்தன், வட்டாட்சியர் ஆர்.கீதா உள்ளிட்டோர் அமைச்சருடன் சென்றனர்.

**பயிர்ச்சேதம் கணக்கெடுப்பு ஆலோசனைக் கூட்டம்**

சிதம்பரம் நகர்மன்றக்கூடத்தில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கீடு செய்வது குறித்து ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு கோடாட்சியர் பி.எஸ்.விஜயலட்சுமி தலைமை வகித்தார்.

திருச்சி வேளாண் துணை இயக்குநர் ஜி.சரவணன், வேளாண் உதவி இயக்குநர் இ.விஜயக்குமார், வட்டாட்சியர் முரளிதரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் கோட்டாட்சியர் பேசுகையில், பட்டா உள்ள நிலங்கள் சுமார் 33 சதவீத பாதிப்பு இருந்தால் மட்டுமே கணக்கீடு செய்ய வேண்டும். விரைந்து கணக்கீடு செய்து உடனடியாக பட்டியலை அலுவலர்கள் ஒப்படைக்க வேண்டும் என்றார்.

இதில் சிதம்பரம், கீரப்பாளையம், குமராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**500 கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை**

மண்ணாடிப்பட்டு கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்ற கால்நடைகளுக்கான இலவச சிகிச்சை முகாமில் 500-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

65-ஆவது உலக கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு, புதுச்சேரி அரசு கூட்டுறவுத் துறை, கால்நடைத் துறை, கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவை

சார்பில் மண்ணாடிப்பட்டு கிராமத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் இலவச சிறப்பு கால்நடை சிகிச்சை முகாம் நடைபெற்றது.

இதில், மண்ணாடிப்பட்டு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள 500-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பாண்லே நிறுவன மேலாண் இயக்குநர் முரளி மருத்துவ முகாமைத் தொடங்கி வைத்தார். கால்நடை மருத்துவர்கள் சிவக்குமார், மனோகரன், செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**கால்நடை துறைக்கு புதிய கட்டிடங்கள் 13ம் தேதி ஜெயலலிதா திறந்தார்**




சென்னை : திருவாரூர், விழுப்புரம், அரியலூர், கோயம்புத்தூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாமக்கல்,

புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருவள்ளூர், வேலூர், திருச்சி, கடலூர், சேலம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 900 கிராம பஞ்சாயத்துக்களை சேர்ந்த சுமார் 7 லட்சத்து 50 ஆயிரம் கால்நடைகளும், விவசாயிகளும் பயனடையும் வகையில் ரூ.30 கோடியே 44 லட்சம் செலவில் 150 கால்நடை மருந்தக கட்டிடங்களை என தமிழகம் முழுவதும் மொத்தம் ரூ.101 கோடியே 77 லட்சத்து 70 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைகளுக்கான கட்டடிங்களை முதல்வர் ஜெயலலிதா கடந்த 13ம் தேதி தலைமை செயலகத்தில் வீடியோ கான்பரன்சிங் மூலம் திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்தின் சார்பில் ரூ.12 கோடி செலவில் நாகப்பட்டினத்தில் புதிதாக கட்டப்படவுள்ள மீன்வள பொறியியல் கல்லூரிக்கு ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார். கால்நடை துறை சார்பில் நடைபெற்ற வீடியோ கான்பரன்சிங் நிகழ்ச்சி தலைமை செயலகத்தில் கடந்த 13ம் தேதி நடைபெற்றது.

* தக்காளி விலை இரு மடங்கானது * பொதுமக்கள் கடும் பாதிப்பு

பலத்த மழை, வெள்ளத்தை காரணம் காட்டி காய்கறி விலை கிடுகிடு உயர்வு

சென்னை : சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் அடைமழை, வெள்ளத்தை காரணம் காட்டி காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளன. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியதை தொடர்ந்து, கடலோர மாவட்டங்களில் நல்ல மழை பெய்தது. கடலூர் பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. இந்தநிலையில், புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகி, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மழை கொட்டித் தீர்த்தது. சென்னையைச் சுற்றிய அனைத்து ஏரிகளும் நிரம்பின. 165 ஏரிகள் உடைந்தன. சென்னைக்கு தண்ணீர் வழங்கும் பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம் ஏரிகள் நிரம்பின. புழல் ஏரியைத் தவிர மற்ற ஏரிகளில் தண்ணீர் அதிக அளவில் திறந்து விடப்பட்டன. சென்னையில் 10 நாட்களாக பெய்த தொடர் மழைக்கு நகரின் பல தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியிருந்தது. இப்போது ஏரிகளில் திறந்து விடப்பட்ட

தண்ணீர், அடையாறு, கூவம், கொசஸ்தலை ஆறுகளில் கரைபுரண்டு ஓடியது. ஆறுகளில் அதிகமாக தண்ணீர் திறந்து விடப்பட்டதால் தண்ணீர் ஊருக்குள்ளும் புகுந்தது. இதனால், கடந்த 4 நாட்களாக சென்னை புறநகர் பகுதிகள் அனைத்தும் தண்ணீரில் மிதந்தன. பல லட்சம் பேர் வீடுகளுக்குள் முடங்கினர். அவர்கள் வீட்டில் இருந்த பால் பாக்கெட்டுகளை வைத்து சமாளித்தனர். உணவுப் பொருட்கள் கிடைக்கவில்லை. இதனால் ஒரு பாக்கெட் பாலின் விலை ரூ.50 வரை விற்கப்பட்டது. அம்பத்தூர் பால் நிறுவனத்துக்குள் தண்ணீர் புகுந்ததால் ஆவின் பால் சப்ளை பாதிக்கப்பட்டு நகரின் பல இடங்களில் பால் விற்பனை முற்றிலும் பாதிக்கப்பட்டது. இதனால் தனியார் நிறுவனங்களின் பால், கடைக்காரர்களின் விருப்பத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்தநிலையில், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் விவசாயம் முற்றிலும் முடங்கியது. இதனால் கத்தரிக்காய், பீன்ஸ், வெண்டைக்காய், வாழைக்காய், முருங்கைக்காய், தக்காளி ஆகியவற்றின் விலை வரலாறு காணாத அளவில் விற்பனை செய்யப்பட்டன. தமிழகத்தில் மழை பெய்தால் ஆந்திராவில் இருந்து காய்கள் வாங்கி விற்பனை செய்யப்படும். ஆனால் ஆந்திராவிலும் மழை பெய்ததால், காய்கறிகளின் வரத்து குறைந்தது. இதனால் விலை பல மடங்கு உயர்ந்தது. இருந்தாலும் வெள்ளத்தை காரணம் காட்டி எல்லா காய்கறிகளின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது பொது மக்களை கடுமையாக பாதித்துள்ளது.

முன்பு 200 லாரிகளில் வந்த காய்கறிகள், நேற்று 140 லாரிகளில் மட்டுமே வந்தது. இதனால் காய்கறிகளின் விலை 2 மடங்காக உயர்ந்தது. தனியார் கடைகளில்: அரசு மலிவு விலை கடைகளில் தக்காளி ரூ.43, வெங்காயம் ரூ.25க்கு விற்பனை செய்யும்போது தனியார் கடைகளில் மட்டும் ஏன் விலை உயர்த்தி விற்கப்படுகிறது என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். சென்னையில் கூடுதலாக 50 அரசு மலிவு விலை காய்கறி கடைகள் 18ம் தேதி முதல் திறக்கப்படும் என்று ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி நேற்று சென்னையில் தற்போதுள்ள 50 கடைகளுடன் கூடுதலாக 50 அரசு காய்கறி கடைகள் திறக்கப்பட்டது. இந்த காய்கறி கடைகளில் தக்காளி கிலோ ரூ.43,

கத்தரிக்காய் ரூ.25, வெங்காயம் ரூ.39, புடலங்காய் ரூ.27, பீட்ரூட் ரூ.19, உருளைகிழக்கு ரூ.23, வெங்காயம் ரூ.47க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தனியார் காய்கறி கடைகளில் நேற்று தக்காளி ரூ.100, புடலங்காய் ரூ.40, கத்தரிக்காய் ரூ.50, வெங்காயம் ரூ.50, உருளை கிழங்கு ரூ.40, பீட்ரூட் ரூ.40 என ஒவ்வொரு காய்கறியும் இரண்டு மடங்கு விலைக்கு விற்கப்பட்டது. மாவட்டங்களிலும் கூட காய்கறி விலைகள் சற்று உயர்த்தப்பட்டுள்ளன.

**தமிழகத்தில் 5 நாள் கனமழைக்கு வாய்ப்பில்லை : வானிலை ஆய்வு மையம் தகவல்**

சென்னை : தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழைக்கு வய்ப்பில்லை என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் தொடர்ந்து ஒரு வாரமாக பெய்த கனமழைக்கு காரணமாக இருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆந்திரா நோக்கி சென்றது. இதனால் தமிழகத்தில் கனமழை பெய்வது குறைந்துள்ளது. இருப்பினும் வளி மண்டல மேல் அடுக்கில் உள்ள காற்று சுழற்சியால் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று அதிகபட்சமாக சிவகாசியில் 100 மிமீ மழை பெய்துள்ளது. விருதுநகர் 90 மிமீ, ராஜபாளையம் 80 மிமீ, திருமயம், திருமங்கலம், இலுப்பூர், இளையாங்குடி 60 மிமீ, அருப்புக்கோட்டை, மருங்காபுரி, சாத்தூர் 50 மிமீ, வாடிப்பட்டி, கடலாடி, மேலூர், பரமக்குடி 40 மிமீ, முதுகளத்தூர் 30 மிமீ, ஆர்.எஸ்.மங்கலம், சோழவந்தான், திருபுவனம் 20 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில், ஆந்திராவுக்கு நகர்ந்து சென்ற தீவிர காற்றழுத்தம் அங்கு வலுவிழந்துவிட்டது. இதனால் வட தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழை பெய்வதற்கான வாய்ப்பு இல்லை. இருப்பினும் வளி மண்டல மேல் அடுக்கில் நிலை கொண்டுள்ள காற்று சுழற்சி காரணமாக தமிழகத்தின் உள் மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்வதற்கான வாய்ப்புள்ளது. சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரின் சில இடங்களில் லேசான மழை பெய்யும்.

22ம் தேதி புயலா? திட்டமிட்ட வதந்தி

உலகின் பிரபலமான அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா கூறியதாக, வரும் 21, 22ம் தேதிகளில் மிகப்பெரிய அளவிலான இந்தியாவில் இதுவரை பெய்யாத அளவுக்கு தமிழகம் பெரிய மழையை சந்திக்க உள்ளது. அதுவும் சென்னையில் வரலாறு காணாத அளவுக்கு 250 செ.மீ மழை பொழிய உள்ளது பரபரப்பான தகவல்கள் ெவளியானது. இதை தவிர நாளிதழ் ஒன்று பஞ்சாங்கத்தை காரணம் காட்டி மீண்டும் புயல் வரும் என்று செய்தி வெளியிட்டதால் பொதுமக்கள் கடும் பீதியில் உள்ளனர்.

இது பற்றி அந்த தனியார் தொலைக்காட்சி தாங்கள் அப்படி செய்தி எதையும் வெளியிடவில்லை என மறுத்துள்ளது. நாசாவின் குறிப்பிட்ட அந்த வலைதளத்தை பார்த்தபோது அப்படி எந்தவிதமான தகவலும் இல்லை. இது 2013ம் ஆண்டு நாசா தளத்தில் கேட் புயல் சம்பந்தமாக பதிவாகியுள்ளது. ஆகவே இது தவறாக விஷமிகளால் தற்போது பரப்பி விடப்படுகிறது என்பது தெளிவாகிறது. இது பற்றி வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணனிடம் கேட்டபோது அது தவறான தகவல் என்றும் தற்போது புயல் உருவாகும் சாத்தியம் எதுவும் இல்லை என்றார்.

**கரும்பு விவசாயிகளுக்கு நேரடி மானியம்**




புதுடெல்லி : கரும்பு விவசாயிகளுக்கு நிலுவை தொகை தர முடியாமல் சர்க்கரை ஆலைகள் திணறி வருகின்றன. இந்நிலையில் பிரதமர்

நரேந்திரமோடி தலைமையிலான கேபினட் குழு, கரும்பு விவசாயிகளுக்கு குவின்டாலுக்கு ரூ.4.50 மானியம் வழங்க அனுமதி அளித்துள்ளது. இதுகுறித்து மத்திய மின்துறை அமைச்சர் பியுஷ்கோயல் கூறுகையில், ''சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு வைத்திருந்த நிலுவை ரூ.6,500 கோடியாக குறைந்துள்ளது. இந்த நிலையில், கரும்பு விவசாயிகளுக்கும் நேரடி மானியமாக குவின்டாலுக்கு ரூ.4.50 உற்பத்தி மானியமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசுக்கு ரூ.1,147 கோடி செலவு ஏற்படும்''என்றார்.

**பதுக்கல்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 5,366 டன் பருப்பு ஏலம்**



புதுடெல்லி : பதுக்கல்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 5,366 டன் பருப்பு வகைகள் சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. பருப்பு வகைகள் விலை வரலாறு காணாத அளவுக்கு உச்சத்துக்கு சென்றது. இதை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து பருப்பு வகைகளை மத்திய அரசு இறக்குமதி செய்துள்ளது. இது தவிர, இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உணவு பதப்படுத்துதல் நிறுவனங்கள், பெரிய அளவிலான டிபார்ட்மென்டல் ஸ்டோர்கள் பருப்பு வகைகளை இருப்பு வைக்க கட்டுப்பாடுகள் விதித்து மத்திய அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்தது. பதுக்கலை கண்காணிக்குமாறும், அதிரடி சோதனைகளை நடத்துமாறும் மாநில அரசுகளையும் கேட்டுக்கொண்டது. பறிமுதல் செய்யப்பட்ட பருப்பு வகைகள் அந்தந்த மாநில அரசுகள் மூலம் சந்தைக்கு சப்ளை செய்யப்படும். இதனால் பருப்பு விலை மேலும் குறைவதற்கு

வாய்ப்புகள் உள்ளன என நுகர்வோர் விவகார அமைச்சகம் தெரிவித்திருந்தது. இதுவரை 1,32,777.14 மில்லியன் டன் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 5,366 டன் பருப்பு வகைகளை சந்தையில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. சாட்டிஸ்கர் (1,489.06 டன்), டெல்லி (8.13 டன்), கர்நாடகா (371.03 டன்), ஒடிசா (1,402.16 டன்), மத்திய பிரதேசம் (1,945.8 டன்), ராஜஸ்தான் (150 டன்) மாநிலங்களில் இந்த பருப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் பருப்பு விலை மேலும் குறையும் என நுகர்வோர் விவகார அமைச்சகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

**ஆழியார் அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஏப்ரல் வரை தண்ணீர் திறப்பு**

பொள்ளாச்சி,: பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணையிலிருந்து, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை தண்ணீர் திறப்பு தொடர்ந்திருக்கும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த 120 அடி கொண்ட, ஆழியார் அணையிலிருந்து புதிய ஆயக்கட்டு, பழைய ஆயக்கட்டு மற்றும் வேட்டைகாரன்புதூர், பொள்ளாச்சி, சேத்துமடைபுதூர் கால்வாய்களுக்கும். குடிநீர் தேவைக்கும் அவ்வப்போது தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மேலும், கேரளாவுக்கும் ஆண்டிற்கு குறிப்பிட்ட டிஎம்சி தண்ணீர் திறக்கப்படுகிறது.

ஆழியார் அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு திறந்துவிடப்படும் தண்ணீர் மூலம் ஆனைமலை, கோட்டூர், வேட்டைக்காரன்புதூர், அம்பராம்பாளையம், வடக்கலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள விவசாய நிலங்கள் பாசனம் பெறுகிறது. ஒவ்வொரு வருடமும் குருவை நெல் சாகுபடி மேற்கொள்ள மே மாதத்தில் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்.

இந்நிலையில், இந்த ஆண்டில் குருவை நெல் சாகுபடி மேற்கொள்ள பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் பொதுப்பணித்துறையிடம் கோரிக்கை வைத்தனர். இதை

தொடர்ந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கும், பொள்ளாச்சி மற்றும் வழியோர கிராமங்களுக்கு குடிநீர் தேவைக்கும் கடந்த ஜூன் மாதம் ஆழியார் அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆழியார் அணையிலிருந்து சிறுபுனல் மின்நிலையம் வழியாக திறந்து விடப்படும் தண்ணீர், 1.25 மெகாவாட் மின்உற்பத்தி செய்யப்பட்டு பழைய ஆயகட்டு பாசன வாய்க்கால் வழியாக வெளியேறி ஆழியார் ஆற்றுடன் செல்கிறது. இந்நிலையில் ஆனைமலை சுற்றுவட்டார பகுதியில் அவ்வப்போது மழைப்பொழிவு இருப்பதால், புதிய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறப்பு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு தண்ணிர் திறப்பு தொடர்ந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆழியார் அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு, மே அல்லது ஜூன் மாதங்களில் திறக்கப்படும் தண்ணீர், அக்டோபர் மாதம் நிறுத்தப்படும். ஆனால், இந்த முறை மேற்குதொடர்ச்சி மலைபகுதியில், தென்மேற்கு பருவமழை இரண்டு மாதத்திற்கும் மேலாக பெய்துள்ளதாலும், தற்போது வடகிழக்கு பருவமழை அவ்வப்போது இருப்பதாலும், அணையின் நீர்மட்டம் 12.30அடி வரை உள்ளது. இதனால், பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் நிறுத்தம் செய்வதில்லை, தொடர்ந்து அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு இருக்கும் எனவும். இதன் மூலம் பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளான பள்ளிவிலங்கன், அரியாபுரம், கரப்பாடி, பெரியணை, வடக்கலூர், ஆனைமலை, கோட்டுர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் பயன்பெறும் என்றும், தற்போது பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு வினாடிக்கு 100கன அடி தண்ணீரும், குடிநீர் தேவைக்கு வினாடிக்கு 50கன அடி தண்ணீர் என மொத்தம் வினாடிக்கு 150கன அடி தண்ணீர் தொடாந்து திறக்கப்பட்டுள்ளதாக என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கொப்பரை ஈரப்பதம் அதிகரிப்பு விற்பனை விலை சரிவு

கோவை, :கோவை, திருப்பூர் மாவட்டத்தில் நிலவும் மழை மற்றும் மேகமூட்டம் கொண்ட சீதோஷ்ணநிலையால் கொப்பரையில் ஈரப்பதம் அதிகரித்துள்ளது.

இதனால் இதன் விலை சரிவடைந்துள்ளது.கோவை, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் நேற்று நிலவிய விளைபொருள்களின் விலை விபரம் வருமாறு: தேங்காய் (100 காய்க்கு) ஆனைமலையில் ரூ.750 முதல் ரூ.2,000 வரை, காரமடையில் ரூ.1,750 முதல் ரூ.1,800 வரை, பொள்ளாச்சியில் ரூ.900 முதல் ரூ.1,320 வரை, அவிநாசியில் ரூ.1,240 முதல் ரூ.1,440 வரை.மக்காச்சோளம் (ஒரு குவின்டால்) காரமடையில் ரூ.1,350 முதல் ரூ.1,400 வரை, கம்பு காரமடையில் ரூ.1,300 முதல் ரூ.1,350 வரை, கொண்டைக்கடலை உடுமலையில் ரூ.4,700 முதல் ரூ.5,100 வரை, கொப்பரை ஆனைமலையில் ரூ.5,835 முதல் ரூ.6,235 வரையும், உடுமலையில் ரூ.6,800 முதல் ரூ.6,952 வரையும் விலை நிலவியது. இதில் கொப்பரை விலை சரிந்துள்ளதால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.இது குறித்து ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் கூறுகையில், ‘கொப்பரையின் தரம் நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம் இல்லாமல், அதிகமாக இருந்ததால் தரம் குறைந்து விலை சரிந்துள்ளது, கொப்பரையில் ஈரப்பதம் அதிகரிப்பிற்கு காரணம் தற்போது நிலவும் மழை மற்றும் மேகமூட்டம் கொண்ட சீதோஷ்ணநிலை தான்’ என்றனர்.

தி இந்து

தமிழால் இணைவோம்

**ராமேசுவரத்தில் சீலா மீன்வரத்து தொடக்கம்**



ராமேசுவரம் தீவு கடற்பகுதியில் சீலா மீன்களின் வரத்து தொடங்கி உள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, கடந்த ஒரு வாரமாக பாம்பன் விசைப்படகு மீனவர்கள் கடலுக்குச் செல்ல மீன்வளத் துறையினர் அனுமதிக்கவில்லை. இந்நிலையில், மன்னார் வளைகுடா மற்றும் பாக். ஜலசந்தி கடல் பகுதியில் சகஜ நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, மீனவர்கள் செவ்வாய்க்கிழமை கடலுக்குச் சென்றனர். நேற்று அவர்கள் ஏராளமான சீலா மீன்களுடன் கரைக்குத் திரும்பினர்.

இதுகுறித்து பாம்பன் விசைப்படகு மீனவர்கள் கூறியதாவது: ராமேசுவரம் தீவுப் பகுதிகளில் ஓலை போன்று நீளமாகவும், மெல்லியதாகவும் இருக்கக்கூடிய ஓலைச் சீலா, கட்டையாக உடல் முழுவதும் சாம்பல் நிறத்தில் இருக்கும் கட்டையஞ்சீலா, உருண்டை வடிவத்தில் இருக்கும் குழிச் சீலா, உடல் முழுவதும் சாம்பல் நிறத்திலும், வாலில் மட்டும் மஞ்சள் நிறத்தில் கரை ஓரங்களில் வாழக்கூடிய கரைச் சீலா, கொழுப்பு அதிகமாக உள்ள சாப்பிடுவதற்கு, சுவை அதிகம் கொண்ட நெய் சீலா, மற்றும் வெள்ளூராச் சீலா,

லோப்புச் சீலா, நாய்க்குட்டி சீலா என எட்டு வகையான சீலா மீன்கள் காணப்படுகின்றன.

இதில் நெய் சீலா மீன்களை மட்டும், அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.400 வரையிலும் விலை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். மற்ற 7 விதமான சீலா மீன்கள் கருவாடாக அதிகளவில் பதப்படுத்தி, தமிழகம் மற்றும் கேரளாவுக்கு அனுப்பப்படுகின்றன என்றனர்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு: 21 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் மூழ்கின- 470 கி.மீ. நீளத்துக்கு சாலைகளும் சேதம்



காஞ்சிபுரம் மாவட்டத்தில் 21 ஆயிரம் ஏக்கர் நெற்பயிற்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மேலும் 470 கிமீ நீளத்துக்கான சாலைகளும் சேதமடைந்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வட கிழக்கு பருவமழையின் தீவிரத் தால் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் மற்றும் ஆறுகளில் வெள் ளப்பெருக்கு ஏற்பட்டது. பல இடங்களில் ஏரிகளின் கரைகள் உடைந்தததால், 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மிதக் கின்றன.

இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக மழை இல்லாதாதல் மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி தலை மையிலான வருவாய்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை கள் மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இதனிடயே வெள்ளநீரால் விளைநிலங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் குறித்து, மாவட்ட வேளாண் துறையினர் கணக்கெடுப்பு நடத்தி வருகின்றனர். மேலும், விளை நிலங்கள் மற்றும் பயிர்கள் பாதிப்பு தொடர்பாக வேளாண் துறைக்கு பொதுமக்கள் தகவல் தெரிவிக்கலாம் என அறிவிக்கப் பட்டது. இதை தொடர்ந்து பல் வேறு பகுதிகளைச் சேர்ந்த விவ சாயிகள் தொடர்ந்து சேத விவரங் களை அளித்து வருகின்றனர்.

இதன்படி 21 ஆயிரத்து 4 ஏக்கர் பரப்பிலான நெற்பயிர்கள் தண்ணீரில் முழ்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது. இதில், இளம் பயிர்களுக்கு யூரியா மற்றும் பொட்டாசியம் உரம் அளித்தால், தானாக சரியாகி விடும் என வேளாண்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்துறை துணை இயக்குநர் சீதாராமன் கூறிய தாவது: வெள்ளத்துக்கு 21 ஆயிரத்து 4 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் முழ்கியுள்ளன. இதில், விதைத்து 35 நாட்கள் ஆன இளம் பயிர்கள் தண்ணீர் தேங்கியதால், பழுப்பு மற்றும் லேசான மஞ்சள் நிறத்துடன் காணப்படும். இவ்வாறு பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு, யூரியா மற்றும் பொட்டாசியம் அளித்தால், ஒருசில நாட்களில் சரியாகிவிடும்.

மேலும், கதிர் முதிரும் தண் மையில் பயிர்கள் சீர்படுத்துவ தென்பது கடினமான காரியம். அதனால், இவைகளை சேத கணக்கில் எடுத்துகொள்ளப்படும். இதனால், தற்போது மாவட்டத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டதாக நேற்றைய நிலவரப்படி 1,500 ஏக்கர் கணக்கில் எடுத்துகொள்ளப் பட்டுள்ளது. எனினும், முழு சேத விவரங்கள் மற்றும் இளம்பயிர்கள் சீரமைக்கும் முயற்சிகளின் முடிவு களில், சேத நிலவரங்கள் இறுதி செய்யப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**சாலைகள் சேதம்**

கனமழையால் மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் முக்கிய சாலைகளில் தண்ணீர் ஆறாக ஓடியது. இதனால், சாலைகளில் அரிப்பு ஏற்பட்டு போக்குவரத்துக்கு லாயக்கற்ற நிலையில் உள்ளன. இதுதொடர்பாக, நெடுஞ்சாலைத் துறையினர் கணக்கெடுப்பு நடத்தி யதில் காஞ்சிபுரம் - செங்

கல்பட்டு, திருப்போரூர் - செங்கல் பட்டு, காஞ்சிபுரம் - உத்திரமேரூர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் - காஞ்சி புரம் சாலைகள் மற்றும் முக்கிய கிராம சாலைகள் என மொத்தம் 470 கிமீ சாலைகள் சேதமடைந்துள்ளன.

இதுகுறித்து, நெடுஞ் சாலைத்துறை வட்டாரங்கள் கூறும்போது, 'லேசான பாதிப்பு உள்ள சாலைகளை உடனடியாக சீரமைத்து வருகிறோம். பெரிய அளவில் சாலைகள் அடித்து செல்லப்பட்ட இடங்களில் புதிய சாலைகள் அமைக்க, அரசிடம் நிதி கேட்கப்பட்டுள்ளது.

நிதி கிடைத்ததும் அந்த சாலை களும் சீரமைக்கப்படும்' என கூறப்படுகிறது._

## திருவள்ளூர்: 995 ஏரிகள் நிரம்பின

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் வட கிழக்கு பருவமழை தற்போது நின்றிருந் தாலும் குடியிருப்பு பகுதிகள் மற் றும் குளங்கள், நீரோடைகள், வரத் துக் கால்வாய்களிலிருந்து ஏரிக ளுக்கு, மழைநீர் வருவது தொடர் கிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள 1,236 ஏரிகளில் 995 ஏரிகள் முழுமையாக நிரம்பின. இதன்படி, பொதுப்பணித்துறை யின் கீழ் உள்ள 587 ஏரிகளில், 445 ஏரிகளும் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் உள்ள 649 ஏரிகளில் 550 ஏரிகளும் முழுமையாக நிரம்பி யுள்ளன. மேலும் 236 ஏரிகள், 50 சதவீதத்துக்கு மேல் நிரம்பி யுள்ளன.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

## பூண்டி ஏரிக்கு வரத்து குறைவு: கொசஸ்தலை ஆற்றில் நீர் வெளியேற்றம் நிறுத்தம்

வடகிழக்கு பருவ மழையினால், பூண்டி, சோழவரம், புழல், செம் பரம்பாக்கம் உள்ளிட்ட சென் னைக்கு குடிநீர் தரும் 4 ஏரிகளின் நீர் இருப்பு, அதன் கொள்ளளவை எட்டும் நிலையில் இருந்தது. இதனால், செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் ஏரிகளில் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வந்தது.

இச்சூழலில், வடகிழக்கு பருவ மழை சற்று ஓய்ந்துள்ளது. இத னால், இந்த ஏரிகளுக்கு வரும் மழைநீரின் அளவு குறைந் துள்ளது. இதனால், 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட பூண்டி ஏரிக்கு நேற்று மாலை நிலவரப்படி வினாடிக்கு 5, 639 கன அடி மழை நீர் வந்துக் கொண்டிருக்கிறது. இதனால் பூண்டி ஏரியின் நீர் இருப்பு 2,700 மில்லியன் கன அடியானது.

இச்சூழலில், மழைநீர் வரத்து குறைவு காரணமாக, 16-ம் தேதி மாலை முதல், 17-ம் தேதி இரவு வரை வினாடிக்கு 300 கன அடி முதல், 25 ஆயிரம் கன அடி வரை கொசஸ்தலை ஆற்றில் விடப்பட்ட உபரி நீரின் அளவு படிபடியாக குறைக்கப்பட்டது.

தொடர்ந்து, நேற்று காலை முதல், பூண்டி ஏரியிலிருந்து, உபரி நீர் கொசஸ்தலை ஆற்றில் விடப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

**புழல் ஏரி**

மாறாக, பூண்டி ஏரியிலிருந்து, சென்னையின் குடிநீர் தேவைக்காக புழல் ஏரிக்கு, இணைப்புக் கால்வாய் மூலம் வினாடிக்கு 500 கன அடி நீர் அனுப்பப்பட்டு வருகிறது என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரும்புக்கு உற்பத்தி மானியம் குவிண்டாலுக்கு ரூ.4.50 வழங்க முடிவு_



கரும்புக்கு உற்பத்தி மானியமாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4.50 காசுகள் நேரடியாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

டெல்லியில் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவையின் கூட்டம் நேற்று நடைபெற்றது. அப்போது கரும்புக் கான உற்பத்தி மானியத்தை நேரடி யாக விவசாயிகளுக்கு வழங்கு வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பின்னர் இது குறித்து செய்தி யாளர்களிடம் தெரிவித்த மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் பியூஷ் கோயல், ‘‘இதன் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு நேரடியாக ரூ.1,147 கோடி சென்றடையும்’’ என்றார்.

மேலும் உலக வர்த்தக அமைப் பில் இணக்கம் கொள்வதற்கான திட்டத்தில் இருந்தும் கரும்பை மத்திய அரசு நீக்கி இருப்பதால், கரும்பு விவசாயிகளுக்கு ரூ.6,500 கோடி வரை நிலுவை தொகை வைத் திருக்கும் சர்க்கரை ஆலைகளின் சுமை கணிசமாக குறைய வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

## தற்காலிக பண்ணை பசுமை கடைகள் மூலம் ஒரே நாளில் 23.5 டன் காய்கறி விற்பனை



தொடர்மழை காரணமாக காய்கறி வரத்து குறைந்து விலை உயர்ந்ததால், தமிழக அரசு சார்பில் திறக்கப்பட்டுள்ள குறைந்தவிலை பசுமைக் காய்கறிக் கடையில் காய்கறிகள் வாங்கும் பொதுமக்கள். இடம்: அபிராமபுரம். படம்: க.ஸ்ரீபரத்

தமிழக அரசு சார்பில் சென்னையில் 50 இடங்களில் தற்காலிக பண்மை பசுமை கடைகள் நேற்று திறக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கனமழை காரண மாக, காய்கறி வரத்து குறைந்து, அவற்றின் விலை வேகமாக உயர்ந் துள்ளது. காய்கறி விலையை கட்டுப்படுத்தும் விதமாக தமிழக அரசு சார்பில் சென்னையில் 50 இடங்களில் தற்காலிக பண்ணை பசுமை கடைகள் திறக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் அறிவித்திருந் தார். அதனைத் தொடர்ந்து, 50 இடங்களில் தற்காலிக பண்ணை பசுமை கடைகள் திறக்கப்பட்டன.

இது தொடர்பாக கூட்டுறவுத் துறை அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது அவர் கூறியதாவது: கூட் டுறவு சங்கங்கள் சார்பில் 39 கடை களும், பொது விநியோகக் கழகம் சார்பில் 11 கடைகளும் திறக்கப் பட்டுள்ளன. இக்கடைகளில் தின மும் 15 டன் காய்கறிகளை விற்பனை செய்ய திட்டமிட்டிருந்தோம். மழை விட்டுள்ள நிலையில் அதிக அளவில் மக்கள் காய்கறிகளை வாங்குவார்கள் என கருதி, முதல் நாள் விற்பனைக்கு 23 டன் காய்கறிகளை கிருஷ்ணகிரி மாவட்டம் செட்டிப்பள்ளி, பாகலூர், பேரிகை போன்ற பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மூலமாக கொள்முதல் செய்துள்ளோம்.

இந்த கடைகளில் தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு, புடலங்காய், கத்தரிக்காய், பீட்ரூட், வெண்டைக்காய் ஆகிய 7 வகை யான காய்கறிகள் விற்பனை செய் யப்படுகின்றன. தற்போது வெளிச் சந்தையில் உள்ள விலையை விட இங்கு மிகக் குறைவாக விற்பனை செய்யப்படுகிறது.

ஒவ்வொரு கடைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட காய்கறி கள் சில மணி நேரங்களிலேயே விற்றுத் தீர்ந்தன. பின்னர் அந்தந்த கடைகளின் தேவை அறிந்து, அதற் கேற்றவாறு கூடுதல் காய்கறிகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப் பட்டன. இக்கடைகள் பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

அதனால் இன்றைய (வியாழக் கிழமை) விற்பனைக்கு 3 டன் கூடுதலாக 26 டன் காய்கறிகளை கொள்முதல் செய்திருக்கிறோம். ஒரே நாளில் 23.5 டன் காய்கறிகள் விற்பனையாகியுள்ளன.

**மக்கள் வரத்து அதிகரிப்பு**

கனமழை விட்டுள்ள நிலையில் கடந்த ஒரு வாரத்துக்கு பிறகு கோயம்பேடு மார்க்கெட்டுக்கு காய்கறி வாங்க அதிக அளவில் பொதுமக்கள் நேற்று வந்திருந் தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை யன்று விற்பனை செய்யப்பட்டதை விட நேற்று காய்கறிகளின் விலை குறைவாக இருந்தது. வியாசர் பாடி, கொடுங்கையூர் முத்தமிழ் நகர், அமைந்தகரை, மயிலாப்பூர் உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதி களில் சாலையோர கடைகளிலும் காய்கறிகளை வாங்க மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

விகடன்

**தமிழகத்தில் மீண்டும் மழை!**

**சென்னை:** தமிழகத்தில் கடந்த சில நாட்களாக ஓய்ந்திருந்த மழை தற்போது மீண்டும் பெய்ய ஆரம்பித்துள்ளது.



வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ,தமிழகத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்தது. வரலாறு காணாத அளவுக்கு பெய்த தொடர் மழை காரணமாக சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட பல வட மாவட்டங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

ஏரிகள் நிரம்பியதால் உபரி நீர் திறந்துவிடப்பட்டது. இந்தன் காரணமாக பல பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்தது. வீடுகளுக்குள் மழை நீர் புகுந்ததால் அவர்கள் படகுகள் மூலம் மீட்கப்பட்டனர். பல இடங்களில் மக்கள் தங்கள் குடியிருப்பு மாடிகளில் தஞ்சம் புகுந்தனர். அவர்களுக்கு உணவு ஹெலிகாப்டர் மூலம் வழங்கப்பட்டது.

இந்நிலையில், மழை நீர் வடியாமல் பல பகுதிகள் நீரில் மூழ்கி உள்ளது. மழையால் ஏற்பட்ட தாக்கம் இன்னும் சரிவர தணியாத நிலையில், மீண்டும் தமிழகத்தில் பரவலாக மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் விடிய விடிய கனமழை பெய்து வருகிறது. இதனால், நியாய விலைக்கடை, வி.ஏ.ஓ. அலுவலகம், குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் சூழ்ந்துள்ளது.

செங்கோட்டை அருகே புளியறை எஸ்.வளைவில் மழைக்கு மரம் விழுந்துள்ளதால் தமிழகம்-கேரள இடையே போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது.

சென்னை, திருவள்ளூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் மிதமான மழை பெய்து வருகிறது. இதேபோல், நாகை, காரைக்கால் மற்றும் புதுவையிலும் கனமழை பெய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

சென்னையை பொறுத்த வரை அடையார், கோட்டூர்புரம், கிண்டி, மைலாப்பூர், மந்தவெளி, நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் மற்றும் அண்ணாசாலை, போன்ற பகுதிகளில் மிதமான மழை பெய்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து நீர் திறப்பு 500 கன அடியாக குறைப்பு



பூந்தமல்லி,

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளுள் ஒன்றான செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து கடந்த 2 நாட்களாக உபரி நீர் திறந்து விடப்பட்டு வந்தது. நேற்று முதல் ஏரிக்கு நீர்வரத்து குறைந்து வருவதால் உபரி நீர் திறக்கப்படுவது குறைக்கப்பட்டு உள்ளது.

நேற்று மாலை நேர நிலவரப்படி 500 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. தற்போது ஏரிக்கு 2 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டு இருக்கிறது. நீர் மட்டம் 21.97 அடியாகவும், ஏரியில் 3,067 மில்லியன் கன அடி நீர் இருப்பதாகவும் நீர்வரத்து மேலும் குறையும் வகையில் தண்ணீர் திறந்து விடப்படுவது மேலும் குறைக்கப்படும் என்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வரும் நாட்களில் புயல் எதுவும் இல்லை தமிழகம், புதுச்சேரியில் இன்று அனேக இடங்களில் மழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தகவல்




சென்னை,

வரும் நாட்களில் புயல் எதுவும் இல்லை என்றும், தெற்கு ஆந்திரா

வங்கக்கடலில் நிலைக்கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் இன்று (வியாழக்கிழமை) மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வுபகுதி

வடகிழக்கு பருவமழை காலமான தற்போது தமிழகம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து வங்கக்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தின் வட கடலோர மாவட்டங்கள் மற்றும் பல்வேறு இடங்களில் கனமழை பெய்தது.கடந்த இரு தினங்களாக மழை அளவு குறைந்துள்ளது. இந்த நிலையில், தெற்கு ஆந்திரா வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் கடந்த 16-ந்தேதி (திங்கட்கிழமை) காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக நேற்று முன்தினம்(செவ்வாய்க்கிழமை) மாறியது.இதனால் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது. தற்போது அந்த தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி வலுகுறைந்து, அதே பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக நீடிக்கிறது என்றும், இதன் காரணமாக, தமிழகத்தில் அனேக இடங்களில் மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அனேக இடங்களில் மழை பெய்யும்இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

தெற்கு ஆந்திரா வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் நேற்று (நேற்று முன்தினம்) நிலைகொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, வலு குறைந்து, காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறி அதே பகுதியில் நீடிக்கிறது. மேலும், தமிழ்நாட்டின் உள்மாவட்டங்களில் ஒரு மேலடுக்கு சுழற்சி நிலைக்கொண்டுள்ளது. இந்த காரணங்களால், அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று), தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களிலும், ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யும்.குறிப்பாக விருதுநகர், கோவை, நீலகிரி

உள்பட உள்மாவட்டங்களில் கனமழை இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. சென்னையை பொறுத்தவரையில், வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

புயலுக்கு வாய்ப்பு இல்லை

புயல் போன்ற நிகழ்வுகள் எதுவும் வரும் நாட்களில் இல்லை. அப்படியே இருந்தாலும், அது நிலநடுக்க கோட்டுக்கு அருகில் இந்திய பெருங்கடல் பகுதியில் தான் நிலவும். நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

சிவகாசி 10 செ.மீ., விருதுநகர் 9 செ.மீ., ராஜபாளையம் 8 செ.மீ., கோவிலங்குளம், திருமயம், திருமங்கலம், இலுப்பூர், தொண்டி, இளையாங்குடி, சூரங்குடி ஆகிய இடங்களில் தலா 6 செ.மீ., அருப்புக்கோட்டை, மருங்கபுரி, கழுகுமலை, சாத்தூர் ஆகிய இடங்களில் தலா 5 செ.மீ., சிட்டாம்பட்டி, வாடிப்பட்டி, கடலாடி, மேலூர், பரமக்குடி ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ. மழை பெய்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## கால்நடை பராமரிப்பு, மீன்வளத்துறை புதிய கட்டிடங்கள் திறப்பு: நாகப்பட்டினத்தில் புதிய மீன்வள பொறியியல் கல்லூரி ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்



சென்னை,

கால்நடை பராமரிப்பு, மீன்வளத்துறை புதிய கட்டிடங்களை முதல்-அமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்து, நாகப்பட்டினத்தில் புதிய மீன்வள பொறியியல் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்.இதுகுறித்து தமிழக அரசு சார்பில் நேற்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கால்நடை மருந்தக கட்டிடங்கள்

கடந்த 13-ந் தேதி தலைமை செயலகத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை சார்பில் ரூ.101 கோடியே 77 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகங்கள், கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையக் கட்டிடங்கள், மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், மீன் விற்பனைக்கூடம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய கட்டிடம், விடுதிக் கட்டிடம் ஆகியவற்றை முதல்-அமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்தார். திருவாரூர், விழுப்புரம், அரியலூர், கோவை, தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, காஞ்சீபுரம், கரூர், மதுரை, நாமக்கல், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருவண்ணாமலை,

நெல்லை, திருவள்ளூர், வேலூர், திருச்சி, கடலூர், சேலம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 900 கிராம பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த சுமார் 7 லட்சத்து 50 ஆயிரம் கால்நடைகளும், விவசாயிகளும் பயனடையும் வகையில், ரூ.30 கோடியே 44 லட்சம் மதிப்பீட்டில் அறுவை சிகிச்சை அறை, ஆய்வக அறை, சிகிச்சைக் கூடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 150 கால்நடை மருந்தகக் கட்டிடங்களை முதல்-அமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லியில் ரூ.68 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையக் கட்டிடம், நாகப்பட்டினம் மாவட்டம் பழையாரில் ரூ.32 கோடியே 22 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டமைப்புகளுடன் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகம், ராமநாதபுரம் மாவட்டம் ரோச்மாநகர், கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனை மற்றும் திருவள்ளூர் மாவட்டம் எண்ணூர் முகத்துவாரகுப்பம் ஆகிய இடங்களில் ரூ.13 கோடியே 44 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 மீன் இறங்குதளங்கள், ஆகியவற்றை முதல்-அமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

ரூ.101 கோடியே 70 லட்சத்தில்...

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் அமைந்துள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழில் முனைவோருக்கான மீன்பதன மையக் கட்டிடம் மற்றும் ரூ.3 கோடியே 80 லட்சம் மதிப்பீட்டில் 16,500 சதுர அடி கட்டிட பரப்பளவில், 35 மகளிர், 35 ஆண்கள் தங்கும் வசதியுடன், விடுதி காப்பாளர் அறை, அலுவலக அறை, சமையல் அறை, உணவுகூடம் ஆகியவற்றை உள்ளடக்கிய விடுதிக் கட்டிடம், என மொத்தம் ரூ.101 கோடியே 77 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைகளுக்கான கட்டிடங்களை முதல்-அமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்மேலும், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினத்தில் புதிதாக கட்டப்படவுள்ள மீன்வளப் பொறியியல்

கல்லூரிக்கு முதல்-அமைச்சர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரி வேகமாக நிரம்புகிறது வேடிக்கை பார்க்க பொதுமக்களுக்கு தடை



செங்குன்றம்,

சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரி வேகமாக நிரம்பி வருகிறது. கரையில் நின்றபடி ஏரியை வேடிக்கை பார்க்க பொதுமக்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது.

புழல் ஏரி

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் மிக முக்கியமானது புழல் ஏரி. இந்த ஏரியின் மொத்த கொள்ளளவு 3,300 மில்லியன் கன அடி. இந்த ஏரி 13 ஆண்டுகளுக்குப்பிறகு முற்றிலும் காய்ந்து விடும் நிலை ஏற்பட்டது. ஆனால் கடந்த சில நாட்களாக பெய்த பலத்த மழையின் காரணமாக ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து, புழல் ஏரியில் தற்போது 2,129 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.புழல் ஏரிக்கு வெள்ளனூர், பொத்தூர், ஆரிக்கம்பேடு, திருமுல்லைவாயல், எர்ராங்குப்பம், பம்மதுகுளம் உள்ளிட்ட ஏராளமான பகுதிகளில் இருந்தும், லட்சுமிபுரம் ஏரி நிறைந்து அதன் உபரி நீரும் வந்து கொண்டு இருக்கிறது.

சோழவரம் ஏரியின் மொத்த கொள்ளளவு 881 மில்லியன் கன அடி. தற்போது ஏரியில் 692 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கரையின் பாதுகாப்பு கருதி சோழவரம் ஏரியில் இருந்து வினாடிக்கு 850 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதையும் சேர்த்து புழல் ஏரிக்கு மொத்தம் வினாடிக்கு 2,286 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இதனால் புழல் ஏரி முழு கொள்ளளவான 3,300 மில்லியன் கன அடியை விரைவில் எட்டிவிடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு தடை

புழல் ஏரி வேகமாக நிரம்பி வருவதால் கடல் போல் காட்சி அளிக்கிறது. இதை காண ஏராளமானவர்கள் புழல் ஏரிக்கு வந்து செல்கின்றனர். புழல் ஏரி நிரம்பி வருவதால் அசம்பாவிதங்களை தவிர்க்க ஏரிக்கரையில் நின்றபடி ஏரியை பார்க்க பொதுமக்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. புழல் ஏரி நிரம்பி விட்டால் அதன் உபரி நீர் முழுவதும் ஷெட்டர்கள் மூலம் திறந்து விடப்படும். அந்த தண்ணீர் செங்குன்றம், சாமியார் மடம், வடகரை, வடபெரும்பாக்கம், கொசப்பூர், சடையன் குப்பம் வழியாக எண்ணூர் கடலை சென்றடையும்.

ஏரியின் உபரிநீர் வெளியேற்றும் கால்வாயை பொதுப்பணித்துறை அதிகாரிகள் மழைக்கு முன்னரே சீரமைக்காததால் ஏரியில் இருந்து வெளியேற்றப்படும்

தண்ணீர், 100-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குள் புகுந்து அந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் வெள்ளத்தில் சிக்கி அவதிப்படும் நிலை உள்ளது.

தொற்று நோய் அபாயம்

சமீபத்தில் புழல் ஏரியை ஆய்வு செய்த திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் வீரராகவராவ், உபரிநீர் வெளியேற்றும் கால்வாயை சீரமைக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். ஆனால் அதிகாரிகள் எந்த பணிகளையும் செய்யவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

மேலும் மாதவரம், உடையார் தோட்டம், தணிகாசல நகர், பிரகாஷ் நகர், ஆசிரியர் காலனி, வாழைத்தோட்டம் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நகர்களில் உள்ள வீடுகளில் மழைநீர் சூழ்ந்து பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். மழைநீர் வீடுகளில் புகுந்து உள்ளதுடன், கழிவுநீரும் கலந்து வருவதால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

## 17 நாட்களில் 240 மி.மீ. கொட்டி தீர்த்தது பெங்களூருவில் வரலாறு காணாத மழை

பெங்களூரு,

பெங்களூருவில் இந்த மாதம் 17 நாட்களில் 240 மி.மீ. மழை கொட்டி தீர்த்து உள்ளது.

கனமழை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்து உள்ளது. இதனால் மாநிலம் முழுவதும் பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்து வருகிறது. இந்த மழைக்கு சென்னை, கடலூர் உள்ளிட்ட இடங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

இதேபோல் தமிழ்நாட்டின் எல்லைப்பகுதியில் உள்ள கோலார், பெங்களூரு, மைசூரு, சாம்ராஜ்நகர் உள்பட தென்கர்நாடக மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது. குறிப்பாக, பெங்களூருவில் தினமும் மழை பெய்கிறது. நகரில் நாள்

முழுவதும் தூறல் விழுந்து கொண்டே இருப்பதால், அதிக குளிர் நிலவுகிறது.

பெங்களூருவில்...

பெங்களூருவில் வரலாறு காணாத அளவுக்கு மழை பெய்து உள்ளது. அதாவது, இந்த மாதம் (நவம்பர்) முதல் 17 நாட்களில் 240 மி.மீ. (மில்லி மீட்டர்) மழை கொட்டி தீர்த்து உள்ளது. இதற்கு முன்பு 1916-ம் ஆண்டு நவம்பர் மாதம் 252.2 மி.மீ. மழை பெய்ததே அதிக அளவாக உள்ளது. தற்போது இன்னும் 3, 4 நாட்களில் அந்த சாதனையை முறியடிக்கக் கூடிய நிலை உள்ளது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:-

கடந்த ஆண்டு (2014) பின்பருவ மழை அதாவது அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில் 278.2 மி.மீ. மழை பெய்தது. இந்த ஆண்டு அதே காலகட்டத்தில் அதை விட அதிக மழை பெய்து உள்ளது. பொதுவாக நவம்பர் மாத சராசரி மழை அளவு 54.1 மி.மீ. ஆகும். ஆனால் இந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் 17 நாளிலேயே 240 மி.மீ. மழை பெய்து உள்ளது.

6 டிகிரி செல்சியஸ்

நகரில் இடைவிடாமல் தூறல் விழுவதால் வெப்பம் தணிந்து அதிக குளிர் நிலவுகிறது. வெப்ப நிலை சராசரியாக 6 டிகிரி செல்சியஸ் வரை குறைந்து உள்ளது. அதாவது கடந்த 16-ந் தேதி அதிகபட்சமாக 20.8 டிகிரி, குறைந்தபட்சமாக 17 டிகிரி செல்சியஸ் வெப்ப அளவு பதிவாகி இருந்தது. நேற்று முன்தினம் அதிகபட்ச வெப்பநிலை 22 டிகிரி செல்சியசாக இருந்தது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அதிகபட்சமாக 26 டிகிரி செல்சியஸ் வெப்பம் இருந்தது. வங்க கடலில் உண்டான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மழை பெய்து வருகிறது. மேலும் 2 நாட்கள் மழை நீடிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

மின்சார பற்றாக்குறை இல்லை

பெங்களூரு நகரில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக, பெஸ்காம் மின்வாரிய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மின்சார தேவை குறைந்து உள்ளது. கடந்த வாரம் வரை நாள் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 600

மெகாவாட் மின்சாரம் தேவைப்பட்டது. இதனால் 500 முதல் 600 மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறை ஏற்பட்டது. தற்போது மின்சார தேவை 3 ஆயிரம் மெகாவாட்டாக குறைந்து உள்ளது. அந்த 3 ஆயிரம் மெகாவாட் மின்சாரமும் வினியோகம் செய்யப்படுகிறது. இதனால் மின்சார பற்றாக்குறை இல்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் அவர் கூறும்போது, 'நாள் ஒன்றுக்கு மின்சாரம் கொள்முதல் செய்ய ரூ.2 கோடி செலவழிக்கப்படுகிறது. தற்போது மின்சாரம் கொள்முதல் நிறுத்தப்பட்டு உள்ளது. இதன்மூலம் பெஸ்காம் மின்வாரியத்துக்கு நாள் ஒன்றுக்கு ரூ.2 கோடி மிச்சம் ஆகிறது' என்றார்.

## கடலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை 1,166.53 மில்லி மீட்டர் மழை பதிவு



கடலூர்,

கடலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை 1,166.53 மில்லி மீட்டர் சராசரி மழை பெய்துள்ளது. இது 89 சதவீதம் ஆகும்.

ஆண்டு சராசரி மழை

கடலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஜனவரி முதல் டிசம்பர் வரை சராசரியாக 1,335.51 மில்லி மீட்டர் மழை பெய்ய வேண்டும். இதில் குளிர்காலமான ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் சராசரியாக 24.36 மில்லி மீட்டர், கோடைக்காலமான மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் 143.39

மில்லி மீட்டர், தென்மேற்கு பருவமழைக்காலமான ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களில் 325.64 மில்லி மீட்டர், வடகிழக்கு பருவமழைக்காலமான அக்டோபர் முதல் டிசம்பர் வரை உள்ள 3 மாத காலங்களில் 842.12 மில்லி மீட்டர் மழை பெய்ய வேண்டும்.

3 பருவ காலங்களையும் ஒப்பிடும் போது அதிகபட்சமாக வடகிழக்கு பருவமழை காலத்தில்தான் அதிக மழை பொழிவு கிடைக்கும்.

ஆனால் இந்த ஆண்டு குளிர்காலத்தில் எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை. அதிலும் பிப்ரவரி மாதத்தில் மழையே இல்லை. இதற்கு அடுத்ததாக கோடைக்காலத்திலும், தென்மேற்கு பருவமழைக்காலத்திலும் மழையானது சராசரி அளவை தாண்டி பெய்தது.

வடகிழக்கு பருவமழை

பின்னர் வடகிழக்கு பருவமழை கடந்த அக்டோபர் 28–ந் தேதி தொடங்கியது. வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் கடந்த 9–ந் தேதி புதுச்சேரி அருகே கரையை கடந்ததால் அன்று காலை முதல் மறுநாள் காலை வரையில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மாவட்டத்தில் ஏரி, குளம், குட்டை போன்ற பெரும்பாலான நீர் நிலைகள் நிரம்பி வழிந்தன. அன்று அதிகபட்சமாக நெய்வேலியில் 450 மில்லி மீட்டர் மழை பதிவானது. இதைத் தொடர்ந்து உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மேலும் 2 நாட்கள் மழை பெய்தது.

வடகிழக்கு பருவமழைக்காலத்தில் கிடக்க வேண்டிய மழை அளவு 842.12 மில்லி மீட்டர் ஆகும். ஆனால் கடந்த அக்டோபர் 1–ந் தேதி முதல் நேற்று வரை உள்ள நிலவரப்படி 582.64 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருக்கிறது. வடகிழக்கு பருவமழை 60 சதவீதத்தை தாண்டி இருக்கிறது. இன்னும் டிசம்பர் வரை மழை இருப்பதால் சராசரி இலக்கை தாண்டி மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

சராசரியாக 1,166.53 மில்லி மீட்டர் பதிவு

கடந்த ஜனவரி 1–ந் தேதி முதல் நேற்று வரை உள்ள நிலவரப்படி கடலூர் மாவட்டத்தில் 1,166.53 மில்லி மீட்டர் சராசரி மழை பெய்துள்ளது. இது 89

சதவீதம் ஆகும். அதிகபட்சமாக கீழ்செருவாயில் 1,726.20 மில்லி மீட்டர், குறைந்த பட்சமாக ஸ்ரீமுஷ்ணத்தில் 650 மில்லி மீட்டர் மழை பதிவானது.

இதற்கு அடுத்ததாக வடகிழக்கு பருவமழை காலத்தில் நேற்று வரை உள்ள நிலவரப்படி அதிகப்படியாக சிதம்பரத்தில் 925.60 மில்லி மீட்டர், குறைந்த பட்சமாக ஸ்ரீமுஷ்ணத்தில் 287 மில்லி மீட்டர் மழை பதிவானது. மாவட்டம் முழுவதும் சராசரியாக 582.64 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இதில் கடந்த 1–ந் தேதி முதல் நேற்றுவரை உள்ள நிலவரப்படி அதிகபட்சமாக சிதம்பரத்தில் 784.20 மில்லி மீட்டர், குறைந்தபட்சமாக தொழுதூரில் 204 மில்லி மீட்டர் மழை பதிவானது. (பாக்ஸ்)மாவட்டம் முழுவதும் இந்த ஆண்டு நேற்று முன்தினம் வரை பெய்துள்ள மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:–

ஆண்டு மழை அளவு வடகிழக்கு பருவமழை

கீழ்செருவாய் 1,726.20 797

சேத்தியாத்தோப்பு 1,458.30 749.80

சிதம்பரம் 1,423.20 925.60

லால்பேட்டை 1,404.30 521.20

கொத்தவாச்சேரி 1,343 805

அண்ணாமலைநகர் 1,329.70 820.60

விருத்தாசலம் 1,274.10 528.90

குப்பநத்தம் 1,251.54 538.24

பரங்கிப்பட்டை 1,251.54 850.40

மே.மாத்தூர் 1,184 501

புவனகிரி 1,174 629

லக்கூர் 1,128 396.90

வானமாதேவி 1,115.90 736.40

பெலாந்துறை 1,092.10 407

கடலூர் 1,081.20 671.80

காட்டுமன்னார்கோவில் 1,050.40 386.30

தொழுதூர் 1,047.80 341

வேப்பூர் 994.50 395

காட்டுமயிலூர் 840 397

பண்ருட்டி 682.40 549.70

ஸ்ரீமுஷ்ணம் 650 287

சராசரி 1,166.53 582.64

**மழையால் வீடுகள் சேதம் அடைந்தவர்களுக்கு ரூ.21¼ லட்சம் நிவாரண உதவி அமைச்சர் பி.பழனியப்பன் தகவல்**



தர்மபுரி மாவட்டம் முழுவதும் வடகிழக்கு பருவமழையால் 500 வீடுகள் சேதம் அடைந்துள்ளது. வீடுகள் சேதம் அடைந்தவர்களுக்கு, ரூ.21¼ லட்சம் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பி.பழனியப்பன் கூறினார். வடகிழக்கு பருவமழை

தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை குறித்து தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பி.பழனியப்பன் அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார். இதைத்தொடர்ந்து நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தமிழக முதல்-அமைச்சரின் உத்தரவின் பேரில் தர்மபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பே தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதனால் மாவட்டத்தில் பெய்த தொடர்மழையால் பெரிய அளவிலான பாதிப்பு தவிர்க்கப்பட்டு உள்ளது. தொடர்மழையால் மாவட்டம் முழுவதும் 662 வீடுகள் சேதமடைந்து உள்ளன. இவற்றில் பகுதிஅளவில் சேதமடைந்த 500 வீடுகளுக்கு ரூ.21¼ லட்சம் நிவாரண உதவி வழங்கப்பட்டு உள்ளது. முழுமையாக சேதமடைந்த

162 வீடுகளுக்கு நிவாரண உதவி வழங்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது.

அரசுக்கு பரிந்துரை

இந்த தொடர்மழையால் மாவட்டத்தில் 4 பேர் உயிரிழந்து உள்ளனர். உயிரிழந்தவர்களுக்கு நிவாரண உதவி வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. மேலும் உயிரிழந்த 7 கால்நடைகளுக்கும் நிவாரண உதவி வழங்க பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. இதேபோன்று நலப்பரம்பட்டியில் குட்டையில் மூழ்கி உயிரிழந்த 5 சிறுமிகளின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. இந்த மழையால் மாவட்டத்தில் உள்ள வாணியாறு அணை, வரட்டாறு அணை, கேசர்குளிஅணை, பஞ்சப்பள்ளி சின்னாறு அணை ஆகிய 4 அணைகள் நிரம்பி உள்ளன. நாகவதி,தொப்பையாறு அணைகள் நிரம்பி வருகின்றன.

பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 74 ஏரிகளில் 6 ஏரிகள் முழுமையாக நிரம்பி உள்ளன. 4 ஏரிகள் 75 சதவீதமும், 64 ஏரிகள் 50 சதவீதமும் நிரம்பி உள்ளன. ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 904 ஏரிகளில் 67 ஏரிகள் முழுமையாக நிரம்பி உள்ளன. 30 ஏரிகளில் 75 சதவீதமும், 164 ஏரிகள் 50 சதவீதமும், 187 ஏரிகள் 25 சதவீதமும் நிரம்பி உள்ளன. பருவமழையை சமாளிக்க 47 இடங்களில் பொக்லைன் எந்திரங்களும், மின்தடையை போக்க 32 ஜெனரேட்டர்களும், 22 மரம் அறுக்கும் எந்திரங்களும், குளம் மற்றும் ஏரிகளில் உடைப்புகள் ஏற்படாமல் தடுக்க 4 ஆயிரத்து 580 மணல் மூட்டைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன. மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை தங்க வைக்க 47 இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த பணியில் அரசின் பல்வேறு துறைகளை சேர்ந்த 344 அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் பி.பழனியப்பன் கூறினார்.

விவசாயிகள் மகிழ்ச்சி

பேட்டியின்போது கலெக்டர் விவேகானந்தன் கூறுகையில், வடகிழக்கு பருவமழை காலத்தில் தர்மபுரி மாவட்டத்தில் வழக்கமாக இதுவரை 808

மில்லிமீட்டர் மழை பதிவாகும். தற்போது 995 மி.மீ.மழை பதிவாகி உள்ளது. இந்த கூடுதல் மழை காரணமாக தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர் என்று தெரிவித்தார். அப்போது மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு லோகநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் சங்கர், மாவட்ட திட்ட அலுவலர் ஸ்ரீதர், அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் பூக்கடை முனுசாமி, முன்னாள் பால்வளத்தலைவர் டி.கே.ராஜேந்திரன் உள்பட பலர் உடனிருந்தனர்.

முன்னதாக தர்மபுரியை அடுத்த அன்னசாகரம் ஏரியில் பல இடங்களில் கரைகள் சேதமடைந்து இருப்பதாக பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து அமைச்சர் பி.பழனியப்பன், கலெக்டர் விவேகானந்தன் ஆகியோர் அன்னசாகரம் ஏரிப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தினார்கள்.

அப்போது அன்னசாகரம் ஏரியின் கரைகளை பலப்படுத்த வேண்டும். ஏரிநீர் வெளியேறும் மதகுகள் மற்றும் வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், ஏரியில் அடர்ந்து வளர்ந்துள்ள முட்செடிகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை பொதுமக்கள் வலியுறுத்தினார்கள். இதையடுத்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் மேற்பார்வையில், சேதமடைந்த கரைப்பகுதிகளை மணல்மூட்டைகள் மூலம் பலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

## கரூர் மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்திற்கு ரூ.52 லட்சம் இலக்கு நிர்ணயம் கலெக்டர் ஜெயந்தி தகவல்



கரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மூலம் நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு தமிழக அரசின் மானியத்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கி பேசினார்.

அவர் பேசுகையில்:-

ஒவ்வொரு ஆண்டும் நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்திற்கு முன்வரும் பயனாளிகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் 2015-16-ம் ஆண்டிற்கு 160 பயனாளிகளுக்கு ரூ.51 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் 160 யூனிட்கள்(ஒரு யூனிட்டுக்கு 250 கோழிகள் வீதம்) வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது என்றார்.

இந்த நிகழ்ச்சியில் கரூர் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் பழனிவேல், உதவி இயக்குனர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## முதல்போக சாகுபடிக்காக சோத்துப்பாறை அணையில் இருந்து தண்ணீர் திறப்பு



பெரியகுளம்

பெரியகுளம் அருகே உள்ள சோத்துப்பாறை அணையில் இருந்து விவசாயிகளின் முதல் போக சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டது.

<u>2 ஆயிரத்து 865 ஏக்கர்</u>

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் இருந்து சுமார் 9 கிலோ மீட்டர் தொலைவில் சோத்துப்பாறை அணை உள்ளது. இந்த பகுதியில் பெய்த மழையின் காரணமாக அணையின் நீர்மட்டம் உயர்ந்து மொத்த கொள்ளளவான 126.28 அடியை எட்டியது. இந்த அணையின் மூலம் பெரியகுளம், தாமரைக்குளம், பாப்பையன்பட்டி ஆகிய கண்மாய்களுக்கு நீர்வரத்து இருக்கும்.

அத்துடன் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் மூலம் சுமார் 2 ஆயிரத்து 865 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேலும் தென்கரை, லட்சுமிபுரம், மேல்மங்கலம், ஜெயமங்கலம், குள்ளப்புரம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் வடுகபட்டி பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கான குடிநீரும் இந்த அணையின் மூலமே வழங்கப்படுகிறது.

இந்நிலையில் அணையில் இருந்து விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதனையடுத்து நேற்று காலை அணையில் இருந்து வினாடிக்கு 30 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

<u>மார்ச் 15–ந் தேதி வரை...</u>

அடுத்த மாதம் (டிசம்பர்) 15–ந் தேதி வரை இந்த அளவு தண்ணீர் மட்டுமே வெளியேற்றப்படும். பின்னர் 16–ந் தேதி முதல் அடுத்த ஆண்டு ஜனவரி 15–ந் தேதி வரை வினாடிக்கு 27 கனஅடி வீதமும், அதையடுத்து மார்ச் 15–ந் தேதி வரை வினாடிக்கு 25 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்பட உள்ளது.

சோத்துப்பாறை அணைப்பகுதியில் நடந்த தண்ணீர் திறப்பு நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கினார். பெரியகுளம் நகரசபை தலைவர் ஓ.ராஜா, ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் செல்லமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் சிவக்குமார், லாசர் எம்.எல்.ஏ., பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தொடர் மழை எதிரொலி: அணைகளின் நீர்மட்டம் உயர்ந்தது



ஊட்டி

நீலகிரியில் தொடர்ந்து மழை எதிரொலியாக அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றன.

<u>அணைகள்</u>

நீலகிரி மாவட்டத்தின் தலைநகரான ஊட்டி நகரின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதில் பார்சன்ஸ் வேலி அணை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த அணையில் இருந்து எடுக்கப்படும் தண்ணீரை கொண்டு 70 சதவீதத்திற்கும் மேலான பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது நீலகிரியில் வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்தது. தற்போது மழை சற்று குறைந்து வாகனம் மேகமூட்டமாக காணப்படுகிறது. மழை காரணமாக நீர்நிலைகளுக்கு வரும் தண்ணீரின் அளவும் அதிகரித்தது. இதனால் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

<u>டைகர்ஹில் அணை</u>

இது குறித்து நகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:–

நீலகிரியில் கடந்த ஜூன் மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரை பெய்ய வேண்டிய பருவமழை முறையாக பெய்யவில்லை. இதனால் அணைகளில் மிக குறைந்த அளவே தண்ணீர் இருப்பு இருந்தது. மேலும் அடுத்த ஆண்டு கோடை காலத்தில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் நிலவியது.

இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை பெய்ய தொடங்கி உள்ளதால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பார்சன்ஸ்வேலி அணை மொத்தம் 57 அடி கொள்ளவு கொண்டது. இதில் தற்போது 22.68 அடிக்கு தண்ணீர் உள்ளது. இதேப்போல் 39 அடி கொள்ளவு கொண்ட டைகர் ஹில் அணையின் நீர்மட்டம் 27 அடியாக உள்ளது. மார்லி மந்து அணை 23 அடி கொள்ளவு கொண்டது இதன் நீர்மட்டம் 21 அடியாக உள்ளது.

இதுதவிர தொட்டபெட்டா அப்பர் மற்றும் லோயர் அணைகளில் போதுமான அளவிற்கு தண்ணீர் உள்ளது. எனவே அடுத்த ஆண்டு கோடை காலத்திற்கு ஊட்டியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் மழையால் பயிர்கள் பாதிப்பு: விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டுகோள்



பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் மழையால் பயிர்கள் பாதித்ததையடுத்து விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வழங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆய்வு

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் மழையால் பாதிப்படைந்த பகுதிகளை மக்கள் நல கூட்டணியினர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். மாவட்ட பொறுப்பாளர்¢கள் துரைராஜ், ஜெயசீலன்(ம.தி.மு.க.), ஞானசேகரன் (இந்தியகம்யூனிஸ்டு கட்சி), ஜெ.தங்கதுரை (விடுதலைசிறுத்தைகள்), தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட பொறுப்பாளர் செல்லதுரை, வழக்கறிஞர் ஸ்டாலின், விவசாய தொழிலாளர் சங்க பொறுப்பாளர் ரமேஷ் உள்ளிட்டோர் கட்சி பிரதிநிதிகளுடன் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

வேர் அழுகல் நோய்

பெரம்பலூர் அருகே குரும்பலூர் பகுதியில் பருத்திசாகுபடி செய்துள்ள விவசாயிகளின் வயல்களில் தொடர்மழையால் பருத்தி செடிகளில் வேர் அழுகல் நோய் தாக்கி உள்ளதையும், அம்மாபாளையம் பகுதியில் சின்னவெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் நிலங்களில் அறுவடைக்கு தயார்நிலையில் உள்ள சின்ன வெங்காயம் மழை நீரால் அழுகிப்போயிருந்ததையும் பார்வையிட்டனர்.

ரூ.20 ஆயிரம் நிவாரணம்

மேலும் அரசலூர், அன்னமங்கலம், வேப்பந்தட்டை பகுதிகளுக்கு சென்று மக்காச்சோளம் பயிர்களில் கதிர் பாதிக்கப்பட்டுள்ளதை பார்வை யிட்டனர். பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரி பயிர்களான மக்காச்சோளம் சுமார் 24 ஆயிரம் எக்டேரும், பருத்தி 22 ஆயிரம் எக்டேர் சின்னவெங்காயம் 12 ஆயிரம் எக்டேர் வரையும் பயிரிடப்பட்டுள்ளது. எனவே மழையால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் உடனடி நிவாரணம் வழங்க வேண்டும் என்று மக்கள் நல கூட்டணி சார்பில் மாவட்ட நிர்வாகத்திற்கு வேண்டுகோள் விடுத்தனர்.

### சீலாமீன் சீசன் தொடக்கம்; மீனவர்கள் உற்சாகம்




சீலாமீன் சீசன் தொடங்கி உள்ளதால் மீனவர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.
நெய்மீன்
ராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்பிடி தொழில் பிரதான தொழிலாக விளங்கி வருகிறது. நாட்டுப்படகு, விசைப் படகு,கரை வலைகள் என பலமுறைகளில் மீனவர்கள் விளை மீன், கிளாத்தி, மாவுலா, பாறை, முரல், இறால் உள்ளிட்ட பலவகை மீன்களை பிடித்து வருகின்றனர். மீனவர்கள் பலவகை மீன்கள் பிடித்து வந்தாலும் மீன்களிலேயே அதிக சுவை கொண்டது என்றால் அது நெய்மீன் என்று கூறப்படும் சீலா மீன் தான்.

சீலா மீனில் முள்ளே இல்லாமல் சாப்பிடுவதற்கு மிகவும் சுவையாக இருக்கும். ஆண்டுதோறும் சீலா மீன் சீசன் நவம்பர் மாதம் தொடங்கி பிப்ரவரி மாதம் வரை இருக்கும். தற்போது சீலா மீன் சீசன் தொடங்கி உள்ளதால் மீனவர்கள்

உற்சாகம் அடைந்துள்ளனர். பாம்பன் பகுதி நாட்டுப்படகு மற்றும் விசைப்படகு மீனவர்கள் சீலா மீன்கள் பிடித்து வருவதில் மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றனர்.பாம்பனில் இருந்து நேற்றுமுன்தினம் 80-க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் சுமார் 300 மீனவர்கள் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன்பிடிக்க சென்றனர். இந்த மீனவர்கள் அனைவரும் நேற்று பலவகை மீன்களுடன் கரை திரும்பினர். இதில் பல படகுகளில் சீலா மீன்கள் சுமார் 200 கிலோ வரை கிடைத்திருந்தன. இதில் ஒரு படகில் சுமார் 4 அடி நீளத்தில் 23 கிலோ எடை கொண்ட ஒருபெரிய சீலா மீனும் கிடைத்திருந்தது. மீனவர்கள் பிடித்து வந்த சீலா உள்ளிட்ட அனைத்து மீன்களையும் வியாபாரிகள், கம்பெனிகள் வாங்கி தூத்துக்குடி,கேரளா போன்ற பகுதிகளுக்கு அனுப்பிவைத்தனர்.

ஏற்றுமதி

இதுகுறித்து பாம்பனை சேர்ந்த விசைப்படகு உரிமையாளரும், மீனவருமான பேட்ரிக் கூறியதாவது:-சீலா மீன் சீசன் தற்போது தொடங்கி உள்ளது. மீன் பிடித்து கரை திரும்பிய படகுகளில் சராசரியாக ஒரு சீலா மீன் 1 கிலோவில் இருந்து 20 கிலோ எடை வரை கிடைத்துள்ளது. 20 கிலோ எடைக்குமேல் பெரிய சீலா மீன் வலையில் சிக்குவது மிகவும் அரிது. தற்போது 1 கிலோ சீலா மீனின் விலை ரூ.550 ஆக உள்ளது. சிறிய மீனை விட பெரிய சீலா மீன் அதிக சுவையாக இருக்கும். இந்த சீலா மீனை நெய் மீன்,வஞ்சிரம் மீன் என்றும் மீனவர்கள் அழைப்பதுண்டு. ஜனவரி மாதத்தில் டன் கணக்கில் சீலா மீன்கள் கிடைக்கும்.மீனவர்கள் பிடித்து வரும் சீலா மீன்கள் தமிழகத்தில் உள்ள பல ஊர்களுக்கும் அனுப்பப்படுவதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

## சேலத்தில் பூக்கள் விலை ‘கிடுகிடு’ உயர்வு குண்டுமல்லி கிலோ ரூ.1000-க்கு விற்பனை



சேலம் பழைய பஸ் நிலையம் அருகே வ.உ.சி. பூ விற்பனை மார்க்கெட் உள்ளது. இந்த மார்க்கெட்டுக்கு விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் பூக்கும் பூக்களை கொண்டு வந்து விற்பனை செய்து வருகிறார்கள். மழையின் காரணமாகவும், வரத்து குறைவாலும் நேற்று பூக்கள் விலை ‘கிடுகிடு‘ என உயர்ந்தது.

மார்க்கெட்டில் கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.800-க்கு விற்ற குண்டுமல்லி நேற்று ரூ.1000-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதேபோல், கடந்த வாரம் கிலோ ரூ.500-க்கு விற்ற சன்னமல்லி ரூ.800-க்கும், கனகாம்பரம் கிலோ ரூ.500-க்கும், காக்கட்டான் கிலோ ரூ.400-க்கும் விற்கப்பட்டது.

ஜாதிமல்லி கிலோ ரூ.120 முதல் ரூ.160 வரையும், கோழிக்கொண்டை கிலோ ரூ.80-க்கும், சாமந்தி கிலோ ரூ.70-க்கும், பட்டன் ரோஸ் கிலோ ரூ.400-க்கும், சம்பங்கி கிலோ ரூ.60-க்கும், அரளி கிலோ ரூ.200-க்கும், ரோஸ் ஒரு கட்டு ரூ.120-க்கும், பெங்களூர்ரோஸ் (உதிரி) கிலோ ரூ.60-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதுகுறித்து பூ வியாபாரிகள் கூறும் போது, தற்போது

பெய்துள்ள மழையால் பூக்களின் மொட்டுக்கள் அதிகளவில் உதிர்ந்து விடுகின்றன. மேலும் இந்த மாதங்களின் விளைச்சல் குறைவாக தான் இருக்கும். இதனால் மார்க்கெட்டிற்கு பூக்களின் வரத்து கடந்த வாரத்தை விட இந்த வாரம் குறைந்துள்ளது. இதன் காரணமாக பூக்களின் விலை உயர்ந்துள்ளது' என்றனர்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடரும் மழை: வைகை அணையின் நீர்மட்டம் உயர்கிறது



ஆண்டிப்பட்டி,

கடந்த சில நாட்களாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக வைகை அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது.

<u>ஆறுகளில் நீர்வரத்து</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே வைகை அணை அமைந்துள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை உள்பட மாவட்ட விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளுக்கு ஆதாரமாக விளங்கும் வைகை அணை கடந்த 2011–ம் ஆண்டுக்கு பின்னர் முழு கொள்ளளவை எட்டவில்லை.

71 அடி உயரத்திற்கு தண்ணீரை தேக்கி வைக்கும் வசதி கொண்ட வைகை அணை இந்த ஆண்டு முழுகொள்ளளவை எட்டும் என்று அனைத்து தரப்பினரும் எதிர்பார்த்துள்ளனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வடகிழக்கு பருவமழை காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தீவிரம் அடைந்து காணப்பட்டது.

ஆனால் தேனி மாவட்டத்தில் மழையின் அளவு குறைவாகவே உள்ளது. ஆனாலும் இந்த பகுதியில் பெய்த மழை காரணமாக கால்வாய்கள் மற்றும் ஆறுகளில் நீர்வரத்து ஏற்பட்டு உள்ளது.

சீராக உயர்கிறது

இதனால் மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. வைகை அணையின் முக்கிய நீர்ஆதாரமான வைகை ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தொடர் நீர்வரத்து காரணமாக வைகை அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது. இதன்படி இந்த மாதத்தின் தொடக்கத்தில் 48 அடியாக இருந்த வைகை அணையின் நீர்மட்டம் நேற்று காலை 56.53 அடியாக உயர்ந்தது. நேற்று மாலை சுமார் 7 மணியளவில் நீர்மட்டம் 57 அடியை எட்டியது.

60 கனஅடி தண்ணீர்

இங்குள்ள நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் 2 நாட்களுக்கு ஒரு அடி வீதம் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் இந்த ஆண்டு முழு கொள்ளளவை எட்டும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

நேற்று காலை 6 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 1,250 கனஅடி நீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் மட்டும் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர் இருப்பு 2 ஆயிரத்து 972 மில்லியன் கனஅடியாக இருந்தது.